ராகமாலிகா
என இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
கோபிகா
ஆடை அகம்
என பெயர்
மாற்றப்பட்டுள்ளது
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

முகூர்த்த பட்டு புடைவைக்கு
சகல விதமான
காஞ்சிபுரம் சேலை
பட்டு வேட்டி கூறை சாறி
பனாரிஸ் சேலைகளுக்கும்
சிறந்த ஒரே இடம்
கோபிகா
ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 19 வெள்ளிக்கிழமை (02 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 187

### திருமலை - திரியாய் காட்டில் தாக்குதல்

# லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி உட்பட

# 11 படையினர் உயிரிழப்பு; 35 பேர் காயம்!

## தேடுதலுக்கு வந்த படையணி மீது புலி வீரர்கள் வீராவேச பாய்ச்சல்

திருகோணமலை, ஜூன் 2

திருகோணமலை, திரியாய் காட்டுப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு விடுதலைப்புலிகள் நடத்திய வீராவேசத் தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்கா இராணுவ லெப்டினன்ட் கேணல் ஒருவர் உட்பட 11 படையினர் உயிரிழந்தனர் என்றும், 35 பேருக்கு மேற்பட்ட சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் நோக்குடன் வந்த படை அணி மீதே இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தேடுதல் அணிக்கு இராணுவ லெப்டினன்ட் கேணல் காமினி பெர்னாண்டோ தலைமை வகித்தார். இந்தப் படை அணியினர் திரியாய் காட்டுப் பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த சமயம், புலி வீரர்கள் சுற்றி வளைத்து பெரும் தாக்குதலை நடத்தினர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் ஒவ்வொரு பகுதி, பகுதியாக தேடுதல்

### வீட்டுப் பதிவில்லாதவர் கைது

கொழும்பு, ஜூன் 2

கொழும்பு நகரப் பகுதியில் ஒவ்வொரு பகுதி பகுதியாக சுற்றி வளைத்து தேடுதல் நடத்தப்பட்டு வருகிறது. இச் சுற்றி வளைப்பில் பொலிஸாருடன் சேர்ந்து இராணுவத்தினர் மற்றும் விமானப்படையினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

சுற்றிவளைப்பின் போது சம்பந்தப்பட்டபகுதி பொலிஸ் நிலையத்தில் பதிவானவர்களின் பெயர் பட்டியலுடன் பொலிஸார் வருகின்றனராம்

சோதனையிடப்படும் வீட்டில் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்படாத எவராவது தங்கியிருப்பின் அவர் கைது செய்து கூட்டிச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

## நரோமா பயணிகளிடம் பொருள்கள் பறிமுதல்

### கடற்படையினர் கடும் சோதனை

யாழ்ப்பாணம், ஜூன் 2

திருகோணமலையில் இருந்து நேற்று முன்தினம் பருத்தித்துறைக்குப் புறப்பட்ட 'நரோமா' கப்பலில் பயணம் செய்தவர்கள் கடற்படையினரால் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரியவந்தது.

பயணிகள் எடுத்து வந்த பற்றறிகள், கற்பூரம், அலுமினியப் பாத்திரங்கள் ஆகியவற்றை படையினர் பறிமுதல் செய்தனர்,

சைக்கிள்கள் எடுத்து வரவும் அனுமதிக்கப் படவில்லை.

வைத்தியரின் சிபார்சுக் கடிதம் இன்றி எடுத்து வந்த மருந்துகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த இக்கப்பல் ஒரு தொகுதி பயணிகளுடன் நேற்று மாலையே திருகோணமலைக்கு திரும்பியது. (ஓ-3)

## எல்லைப்புற தாக்குதலில் இரு வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 2

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அனுராதபுரம் எல்லைப்புறப் பகுதி பவனக்கடவாய் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தில் மேலும் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். இச்சம்பவத்தில் சிப்பாய் ஒருவரும் ஊர்காவற் படை உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் வருமாறு!

★ ரி 56-2 ரகத்துப்பாக்கி — 1

★ ஆர். பி. ஜி — 1

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பூநகரியில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 2

பூநகரியின் வடக்கு பகுதியில் உள்ள இராணுவ நிலை ஒன்றின் மீது நேற்றுக்காலை 10 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார். (உ-8)

## வடக்குக்கு மண்எண்ணெய்; கொழும்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடக்கில் உள்ள 4 மாவட்டங்களுக்கும் மாதாந்தம் தேவையான மண்எண்ணெய் தொடர்பாக—

அந்தந்த மாவட்ட அரச அதிபர்களுக்கும், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுக்கும் இடையில் நேற்று கொழும்பில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு மாதாந்தம் தேவையான மண்எண்ணெயின் அளவு குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகவும்—

இதற்கான பதிலை இன்று பாதுகாப்பு அமைச்சு செயலாளர் தெரிவிப்பார் என்றும்— யாழ். அரச அதிபர் நேற்று மாலை செயலகத்துக்கு அறிவித்திருந்தார். (ஓ-3)

## மட்டு. காடுகளில் உள்ள முகாம்களை மூட முடிவு

மட்டக்களப்பின் மேற்குப்புறக் காடுகளை அண்டியுள்ள இராணுவ முகாம்களை மூடிவிட ஸ்ரீலங்கா இராணுவத்தின் கிழக்குப் பிராந்திய தலைமையகம் முடிவு செய்துள்ளது.

இந்த முகாம்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உட்பட்டு அழியும் ஆபத்து நிலை இருப்பதாக அஞ்சப்படுவதால் இம்முகாம்களை மூடிவிட முடிவு செய்யப்பட்டுள்ளதாக ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

இம்முகாம்களில் இருக்கும் படையினர் மட்டக்களப்பு நகரை அண்டிய முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள முகாம்கள் பலப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அதிரடிப் படையினர் 6 பேர் மன்னாரில் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 2

மன்னாரில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படையின் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 6 விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மன்னார்த்தீவுக்கும், தள்ளாடி இராணுவ முகாமுக்கும் இடையில் பெரிய பாலத்தடியில் இருந்து 250 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படையின் காவலரணே விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது.

இத்தாக்குதலில் காவலரண் முற்றாக அழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் ஐந்து பொலிஸார் உயிரிழந்ததாகவும்—

காயமடைந்தோர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் —

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-3- 6]

### கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

மன்னாரில் அதிரடிப் படையினரின் காவலரண் மீது நடத்திய தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள் விவரம் வருமாறு!

★ ரி 81 எல். எம். ஜி— 3

★ ரி 56–1 ரகத்துப்பாக்கி — 5

★ ரி 56–2 ரகத்துப்பாக்கி — 1

★ ரி 56 ரவைக் கூடுகள் — 56

★ குண்டுகள் — 4

★ தலைக்கவசம் — 1

★ பை — 1

★ ரவைக்கூடுதாங்கி அணி — 6

★ பொலிஸ் தொப்பி — 1

[ஓ-3)

### மன்னாரில் விமானக் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 2

நேற்றுக்காலை 6. 20 மணியளவில் மன்னார் பரப்புக்கடந்தானில் ''புக்காரா'' விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

ஒரே தடவையில் 9 குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## மனித உரிமைகள் செயலணிக்குழு அடுத்த வாரம் இயங்க ஆரம்பிக்கும்

### அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, ஜூன் 2

அவசரகாலச் சட்ட விதிகளின்கீழ் அமைக்கப்படும் மனித உரிமைகள் செயலணி அடுத்த வாரத்தில் இருந்து இயங்கத் தொடங்கும் என நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நேற்று அறிவித்தார்.

இந்தச் செயலணி அமைக்கப்படுவது குறித்து அமைச்சர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:–

அடிப்படை மனித உரிமைகள் தேவையற்ற விதத்தில் கட்டுப்படுத்துவதைத் தவிர்க்கும் நோக்கில் மனித உரிமைச் செயலணி செயற்படும்.

கைது செய்யப்படுவோர் அது தொடர்பான சட்ட விதிகளுக்கு உட்பட்டு கைது செய்யப்படுவதை மனித உரிமை செயலணி உறுதி செய்யும்.

தடுப்பு முகாம்கள், சிறைச்சாலைகள் போன்றவற்றுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு அதிகரித்த சம்பளம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான அதிகரித்த சம்பளமும், பாக்கிப் பணமும் தாமதமாகவே கிடைக்கும் எனத் தெரியவருகிறது.

அதிகரித்த சம்பளத்தையும், பாக்கிப் பணத்தையும் வழங்க 9 கோடி 9 லட்சம் ரூபா தேவை என்று வடக்கு - கிழக்கு மாகாணசபை திறைசேரியைக் கேட்டிருந்தது.

ஆனால் போதிய நிதி வசதி [illegible] 5 கோடி ரூபாவை மட்டுமே [illegible]

இந்த நிதியில் கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு அதிகரித்த சம்பளமும், பாக்கிப் [illegible] 60 வீதமும் வழங்கப்பட்டதாகவும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு நிலையை சமாளிக்க வடக்கில் படை நடவடிக்கை

''மட்டக்களப்புப் பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்தி வரும் அகோரத் தாக்குதல் நிலைமையிலிருந்து படையினரைக் காப்பாற்றி நிலைமையைத் தளர்த்துவதற்குசிறந்த வழி வடக்கில் பரந்தளவில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதேயாகும்''

— பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களுக்கு இவ்வாறு ஆலோசனை தெரிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது. (உ-6)

## முழு நேர யுத்த அமைச்சர் நியமிக்குமாறு வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 2

வடக்கு—கிழக்கில் போரை நடத்துவதற்கு முழுநேரயுத்த அமைச்சர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று 'தஐலண்ட்' பத்திரிகை அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

போரை நடத்துவதற்குப் பொறுப்பாக உள்ள பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த நீர்ப்பாசன, எரிபொருள்,மின்சக்தி அமைச்சராகவும் இருப்பதால்—

போரை உரிய முறையில் நடத்துவதற்கு கவனம் செலுத்தவும், செயலாற்றவும் அவருக்கு நேரம் போதாது என்றும்

ஆகையால் அவரை முழு நேர யுத்த அமைச்சராக நியமிக்க வேண்டும் என்றும் — அந்த பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மின்சக்தித் தட்டுப்பாடு பெருமளவில் உண்டாகும் என்று நிபுணர்கள் எச்சரித்திருப்பதால் அதனை எதிர்நோக்க வேண்டிய பொறுப்பும் பெரியது ஆதலால்—

போரை நடத்தி வெல்வதில்

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## படை முகாம்களிலிருந்து நேற்று மாலை ஷெல் தாக்கு

### யாழ். நகர் வரை அதிர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 2

பலாலி, மாதகல் மற்றும் காரைநகர் இராணுவமுகாம்களில் இருந்து நேற்று மாலை 6-30 மணிக்குப் பின்னர் சுற்றுப் புறப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஒரே சமயத்தில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களினால் யாழ். நகரும் அதிர்ந்தது.

சேதங்கள் குறித்து இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

வளலாய் இராணுவ முகாம் பகுதியில் இருந்தும் நேற்று மாலை 6 மணியளவில் வல்லை பாலப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலின் போது பாலம் சிறிது சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-15)

## படையினருக்கு மற்றொரு விசேட காப்புறுதித் திட்டம்

கொழும்பு. ஜூன் 2

படையில் உள்ளோரை ஊக்குவிக்கும் விதத்திலும், புதியவர்களை படையில் சேர்வதற்குத் தூண்டும் விதத்திலும் அரசாங்கம் புதிய விசேட காப்புறுதித் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

படையினர் காப்புறுதிக்கான மாதாந்த கொடுப்பனவுகள் தேசியப் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படும்.

புதிய காப்புறுதித் திட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா நேற்று ஆரம்பித்து வைத்தார்,

முப்படைத் தளபதிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய காப்புறுதிப் பத்திரங்களை சந்திரிகா தாமே வழங்கி திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உத்தரப் பிரதேசத்தில் கூட்டணி ஆட்சி முறிந்தது

புதுடில்லி. ஜூன் 2

இந்தியாவின் அதிக மக்கள் தொகை கொண்ட உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஆட்சியிலிருக்கும் சமாஜவாதி - பகுஜன் கட்சி கூட்டணி அரசு கவிழும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சமாஜவாதிக் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் முலாயம் சிங்யாதவ் தலைமையிலான அரசுக்கு தமது பகுஜன் கட்சி வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டிருப்பதாக அக்கட்சியின் தலைவர் கன்ஷிராம் எழுத்து மூலம் ஆளுநருக்கு அறிவித்திருக்கிறார்.

சட்டசபையில் 139 உறுப்பினர்களைக்கொண்ட சமாஜ்வாதிக் கட்சியும், 64 உறுப்பினர்களைக் கொண்ட பகுஜன் கட்சியும் தனித்தனியாக ஏனைய கட்சிகளுடன் இணைந்து தங்களால் ஆட்சி அமைக்க முடியும் என அறிவித்துள்ளன.

சட்டசபையில் தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும்படி முலாயம் சிங் யாதவைக் கோருவதா ஆ

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna–Sri Lanka

FACULTY OF SCIENCE

The examination for selecting the first year students who will be allowed to offer Computer Science as a subject for the Academic year 1994/95 will be held on 15-06-1995 from 9a.m. to 11a.m. in the Chemistry Lecture Theatre (large).

Registrar (C/1289)


வெள்ளவத்தையில்

## கொல்லப்பட்ட இளைஞர் இரத்தினபுரியை சேர்ந்தவர்

கொழும்பு, ஜூன் 2

கடந்த புதன்கிழமை நிசி இரவு வெள்ளவத்தையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞரும் அவருடன் காயமுற்றவரும் இரத்தினபுரியைச் சேர்ந்தவர்கள் என அறியவந்துள்ளது.

27வயதான நரஸன் சத்தியவேல் என்ற இளைஞரே இறந்தவர் ஆவார். அதே வயதுடைய ராமையா தியாகராசா இந்தச் சம்பவத்தில் காயமுற்றார்.

மரணமடைந்த சத்தியவேல் கடந்த 2 ஆண்டுகளாக வெள்ளவத்தை பொலீஸ் நிலையத்துக்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள நகைக் கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தார். தியாகராசா மாலைதீவில் வேலை பார்த்து விட்டு இரண்டு மாதங்களுக்கு முன்னரே நாடு திரும்பியிருந்தார்.

கொல்லப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. (க)

## பொது சுகாதார பரிசோதகர்களுக்கு பயிற்சியளிக்க இங்கு வசதி உண்டு

### சுகாதார அமைச்சுக்கு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

பொது சுகாதார பரிசோதகர்களுக்கு யாழ். பிரதேச பயிற்சி நிலையத்தில் பயிற்சி வழங்குவதற்குத் தேவையான வசதிகள் இருப்பதாக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் நிலைவர அறிக்கை ஒன்றைத் தயாரித்து சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ளது.

பொது சுகாதார பரிசோதகர் பயிற்சிக்கு வடபகுதியிலிருந்து தெரிவு செய்யப்படுவோருக்கு தென் பகுதியில் விரிவுரைகள் சிங்களத்தில் இடம் பெறுவதால் அங்கு செல்ல பின்னடிக்கின்றனர்.

இதனை கொழும்பு சுகாதார அமைச்சுக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இதற்கான பயிற்சியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து பயிற்சியை நடத்துவதற்கான பயிற்சி நிலையத்தின் நிலைவர அறிக்கையை யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திடம் கோரியிருந்தது.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சாதகமான நிலைவர அறிக்கையையடுத்து விரைவில் யாழ். பிரதேச பயிற்சி நிலையத்தில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது (ஒ-4)

பாடசாலைகளில்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த மத்திய மாணவர் பிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளி பிற்பகல் 2-30 மணிமுதல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக டாக்டர் ஆர். தெய்வேந்திரனும் டாக்டர் திருமதி எஸ். தெய்வேந்திரனும் கலந்து கொள்வர். [ஐ]

★ ★ ★

அராலி தென்மேற்கு முருகமூர்த்தி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அதிபர் திருமதி சிவபாக்கியம் சிவபாலன் தலைமையில் அராலி நிலாவௌி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

மேற்படி போட்டிகளில் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச செயலரும் மேலதிக அரசாங்க அதிபருமான திரு.கா. சந்திரராசா கலந்துகொள்வார். (க-12)

★ ★ ★

சாவச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் நாள் விழா இன்று வெள்ளி பி. ப. 2.00 மணிக்கு அதிபர் செல்வி சி.வீரசிங்கம் தலைமையில் வித்தியாலய அரங்கில் நடைபெறும்.

இவ்விழாவின் முதன்மை விருந்தினராக யாழ். கல்வி வலயம் I இன் கல்விப்பணிப்பாளர் இ சிவானந்தனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்விக் கோட்டப் பிரதிப்பணிப்பாளர். திருமதி. புஷ்பா கணேசலிங்கமும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.சி. இளம்பரிதியும் கலந்து கொள்வர். (ஐ-117)

★ ★ ★

தென்மராட்சி ஜூன் 2

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவர்களின் கற்பித்தல் உபகரணக்கண்காட்சி, இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் பாடசாலையில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. கு. சிவானந்தம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்து கொள்வார்.


## முக்கிய அறிவித்தல்

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ். மாவட்டம்

தனியார் கல்வி நிறுவனங்களிலும், பிரத்தியேக வகுப்புக்களிலும் வகுப்புக்கள் யாவும் வழமைபோல் தொடர்ந்து இயங்கும் எனவும் இது வரை பரப்பப்பட்ட வதந்திகள் யாவும் பொய்யானவை, இது தொடர்பாக உண்மைக்கு புறம்பாக வதந்திகள் பரப்புபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி/1291)


## காலி மாவட்டத்திலும் கண்காணிப்பு தீவிரம்!

கொழும்பு, ஜூன் 2

காலி மாவட்டத்திலும் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடும் தமிழ் இளைஞர், யுவதிகள் மீது பொலீஸார் கண்காணிப்பை தீவிரமாக்கியுள்ளனர்.

பஸ்களில் பயணம் செய்யும் தமிழ் இளைஞர்கள் பொலீஸாரின் சோதனைக்கு உள்ளாகின்றனர்.

தேசிய அடையாள அட்டை உட்பட சரியான தகவல்களைக் கொடுப்பவர்கள் விடுவிக்கப்படுகின்றனர்.

சந்தேகத்துக்கு இடமானவர்கள் விசாரணைக்காக கொண்டு செல்லப்படுகின்றனர்.

வர்த்தக நிலையங்கள் தோட்டப் பகுதிகள் பொலீஸாரால் கண்காணிக்கப்படுகின்றன. அங்கெல்லாம் பணியாளர்களின் விவரங்களை பொலீஸார் திரட்டி வருகின்றனர்.

வீடுகளில் வந்து தங்கும் வெளியார் பற்றி தமக்கு அறிவிக்க வேண்டும் எனவும் பொலீஸார் மக்களை அறிவுறுத்தியுள்ளனர். (ஐ-4)

## இன்ரர் கூலர் பஜிரோ கேட்கின்றனர் எம்.பிக்கள்!

கொழும்பு, ஜூன் 2

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமக்கு இன்ரர் கூலர் 200 ரக பஜிரோ வாகனங்கள் வேண்டும் என்று கோரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு முறையீடு செய்துள்ளார்கள். வேறு வகை பஜிரோ வாகனத்தை இறக்குமதி செய்வது என்ற முன்னைய முடிவை மாற்றும்படி அவர்கள் கோரியுள்ளார்கள்.

40 அரசாங்க எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர், புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ஐ தே. க. எம். பிக்களும் இன்ரர் கூலர் பஜிரோக்களின் இறக்குமதியை அனுமதிக்கும்படி வேண்டியுள்ளனர்.

இது முடியாவிடின் அதே விலையுடைய (27 ஆயிரம் அமெரிக்க டொலர்) வேறு எந்த வாகனத்தையாவது இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு இவர்கள் கேட்டுள்ளனர்.

அரசாங்கம் ஜப்பானியர்களுடன் பேரம்பேசி இன்ரர் கூலர் இறக்குமதிச் செலவை 33 ஆயிரம் அமெரிக்க டொலரிலிருந்து 27 ஆயிரம் அமெரிக்க டொலராகக் குறைத்து வேறுவகை பஜிரோவை இறக்குமதி செய்யவிருந்தது.

இந்த இழுபறிகள் நடைபெறும் போது ஜனாதிபதி சந்திரிகா இத்தகைய வாகனங்களின் இறக்குமதி, தேர்தலுக்கு முன் மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு இசைவாக அமைய வேண்டும் என்று கூறியுள்ளார். (க)

## ஐ. தே. க ஆட்சியின் போதே புலிகள் விமானம் பெற்றனர்

### ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 2

தமிழீழ விடுதலைப் புலிகள் 1992 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த போது பொருத்தப்படாத விமானத்தைபிரான்ஸிலிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

அரசாங்கத்துக்கு இவ்வாறு தகவல் கிடைத்துள்ளது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் விமான வலு, அரசாங்கத்தின் திறமையீனத்தாலேயே ஏற்பட்டது என்ற விதமான பத்திரிகை அறிக்கைகளை ஒட்டியே தாம் இந்த விவரத்தை வெளியிடுவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறினார். [க]

## சூழல் பாதுகாப்பு வைபவம்

யாழ்ப்பாணம் ஜூன் 2

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தால் கொண்டாடப்படும் சூழல் பாதுகாப்பு தின நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நாவலர் கலாசாரமண்டபத்தில் யாழ்மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ.பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகராட்சி மன்றத்தின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் தெய்வேந்திரன் "இன்றைய நிலையில் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம்— அதன் செயல்பாடுகள்" எனும் பொருளில் உரை நிகழ்த்துவார். (க-30)

## மறுமலர்ச்சி ஊட்டும் கவிஞர்களின் வரலாறு பதிவாக வேண்டும்

### நூல் வெளியீட்டு விழாவில் புதுவை

யாழ்ப்பாணம், ஜூன் 2

கவிஞர்கள் சாதாரண மனிதரல்ல சமூகத்தின் துன்ப துயரங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து மறுமலர்ச்சியூட்டத் துடிப்பவர்கள் அவர்கள். அவர்களின் வரலாறு பதிவு செய்யப்பட வேண்டும்.

கவிஞர் தில்லைச் சிவனின் "வேலணைத் தீவு புலவர்கள் வரலாறு" நூல் வெளியீட்டு விழாவில் பேசிய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினர்.

வேலணை பல. நோ. கூ. சங்கத்தினால் வெளியிடப்பட்ட இந்நூலின் வெளியீட்டு விழா கடந்த 21 ஆம் திகதி நாவலர் கலாச்சாரமண்டபத்தில் வேலணை பல. நோ. கூ. சங்கத் தலைவர் திரு பொ. மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை மேலும் பேசும்போது கூறியதாவது:

எமது மண்ணில் பலதரப்பட்ட சாதனைகள் காலத்துக்குக் காலம் இடம்பெற்றுள்ளன. அவை பதிவு செய்யப்படவில்லை.

இவ்வாறு இந்த மண்ணின் பெருமையும் இது சாதித்த மாபெரும் சாதனைகளும் எதிர்காலம் புரிந்துகொள்ளாதவாறு மறைந்து போகின்றன. இந்த நூலின் மூலம் எத்தனை பெரிய புலவர்கள் வாழ்ந்த பூமி இது என்பதை உணரமுடிகிறது.

இன்றைய விடுதலைப் போரில் ஏழாயிரம் வீரர்கள் நடுகற்களாகியுள்ளனர், நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் ஆகுதியாகியுள்ளனர். இந்தியப்படையால் நாற்பது கலைஞர்கள் படுகொலைக்கு உள்ளாகினர். இவை யெல்லாம் ஆவணப்படுத்தப்பட வேண்டியவை இந்த வீரர்களை சுமந்த அன்னையர்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டியவர்கள்.

மண்ணெண்ணையும், சீனியும் விற்பது தான் கூட்டுறவுச் சங்கம் என்ற நிலை மாறிவிட்டது. இன்று இந்த மண்ணின் தேவை எது என்பதைப் புரிந்து கொண்டு அதற்கு அமைவாக தமது நடவடிக்கைகளை பல. நோ. கூ. சங்கங்கள் விஸ்தரித்துள்ளன. இது மிகவும் பெருமைப்படத்தக்க விடயம்.

அறிஞர்கள், கலைஞர்கள், புலவர்கள் குறித்த பதிவுகளுடன் இந்த மண்ணின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள் குறித்த வரலாற்று நூல்களும் நிறைய வெளிவர வேண்டும். தீவுப் பகுதியில் வேலணைப் பிரதேசத்தில் இருந்து மாவீரர்களானவர்கள் குறித்த பதிவுகளையும் சங்கம் வெளியிட முன்வரவேண்டும்.

மிக விரைவில் தீவக மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லக் கூடியதாக இருக்கும். அப்பொழுது இந்தப் புலவர்களின் வரலாறு இன்னும் பெரிதாக எழுதக் கூடியதாக இருக்கும். தீவக மக்கள் மண்பற்று மிக்கவர்கள். தமது கிராமத்தை நேசிப்பவர்கள். பாரதியின் மண்பற்று எமக்கு வேண்டும். அந்த மண்ணை, கலைஞர்களை, வீரர்களை, எமது அமைப்பை, தலைமையை, விடுதலையை மக்கள் நேசிக்க வேண்டும்.

கவிஞர் தில்லைச்சிவன் தனது நூல்களை இரண்டாம் பட்சமாக ஒதுக்கிவிட்டு வேலணை புலவர்களின் வரலாற்றை எழுத முன்வந்தது அவரது பரந்த மனப்பான்மையைப் புலப்படுத்துகிறது இவ்வாறு அவர் பேசும் போது கூறினார்.

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு சு. டிவகலாலா வேலணை பல.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் திரு வே. செல்லத்துரை திரு த. குமாரசாமி ஜே. பி. மெய்கண்டதேவர் ஆதீன முதல்வர் நூலாசிரியர் தில்லைச்சிவன் ஆகியோரும் பேசினார்கள்.

திரு தில்லைச் சிவனிடமிருந்து நூலின் முதல் பிரதியை வேலணை முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு புற்றிடம் கொண்டார் சுப்பிரமணியம் பெற்றுக் கொண்டார். [க-111]

## பிரதான சந்தியில் குன்றும் குழியும்

யாழ்ப்பாணம், வெள்ளார் தெருச் சந்தி நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் இருந்து வருகிறது.

பிரதான போக்கு வரவுச் சாலையான மானிப்பாய் வீதியில் இப்பகுதி குன்றும் குழியுமாக இருப்பதனால்.

அவ் வீதியைப்பயன் படுத்தும் பிரயாணிகள் சொல்லொணா சிரமங்களை அனுபவிக்கும் அதேவேளை விபத்துக்களுக்கும் முகம் கொடுக்க நேர்வதாகவும்,

வாகனங்களின் உதிரிப்பாகங்கள் பெருமளவில் சேதமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க-51]


NEW SCIENCE HALL
கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்

97 A/L

ZOOLOGY

திரு. விக்கி B. Sc

SAT, SUN 10 00 – 11 00

ஆரம்பம்:- 3- 06- 95 SAT.

(சி/1292)



புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

97 ஆம் ஆண்டுக்கான
இந்துநாகரிகம் திரு. இர. நித்தியானந்தன்
95, 96 மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

97 ஆம் ஆண்டுக்கான
இந்துசமயம் திரு. கிரிதரன்
95, 96 மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

[சி-1432]



பாரதி
சித்தன்கேணி

SPOKEN ENGLISH With GRAMMAR

By: Mr. MAXVEL

பிரிவு 2
ஆரம்பம்: 03 – 06 – 95
சனி: 4-30
பிரிவு 1 அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

(8427)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலை/ வர்த்தகம் முகாமைத்துவம்

1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சை 1994

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 09-06-95 இற்கு முன்பாக யாழ் பல்கலைக்கழகம், பரீட்சைக்கிளையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும். மீள் பரீட்சார்த்திகள் தகுந்த கட்டண பற்றுச் சீட்டுடன் தமது விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இக் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

– பதிவாளர்.

பரீட்சைக்கிளை,
1995-05-30.

[சி-1290]



வலி. வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (மல்லாகம்)

## கேள்வி விளம்பரம்

மேற்படி விடயம் சார்பான எமது 11 – 5 – 1995 ம் திகதிய பத்திரிகை விளம்பரம் சார்பானது; கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் தினம் 15 – 6 – 95 நண்பகல் 12-00 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் தினம் 13 - 6 - 95 நண்பகல் 12-00 வரையாகும். அத்துடன் பின்வரும் வேலையும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது.

| வேலையின் பெயர் | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
| --- | --- | --- |
| கட்டுப்பிட்டி சுடலைக் காணிக்கு எல்லை வேலி சேற் போடுதல் | 1000/- | 300/- |

நா. வேதநாயகன்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
96, யாழ் [illegible]
மல்லாகம் [illegible] 6 - 1995

(சி- 5800)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 23 — 06 — 1917

விண்ணில்: 16 — 06 — 1994

அமரர் இ. கந்தசாமிப் பத்தர்
[பிரபல வணிகர்]

திதி: 02 — 06 — 1995

ஆண்டு ஒன்று சென்று விட்டாலும் – நீங்கள் நின்ற இடத்தின் நினைவுகள் மறையவில்லை மாண்பு, மனிதம், பண்பு இவைகளால் – நீங்கள் ஆண்ட இல்லம் அஞ்சலி செய்கின்றது.

தெய்வத்தின் தெய்வத்தை நினைக்கும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"ஓம் முருகா இல்லம்"
வடக் வெளிக்கந்தசாமி கோவிலடி,
புதிய செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

(36891)

## 4-ம் வருட நினைவஞ்சலி

தோற்றம்: 05–04-1907

மறைவு: 17-05-1991

அமரர் கந்தசாமி ஞானசுந்தரம்

திதி: 02 - 06 - 1995

இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவனின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்

461, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(36895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் கோயில்
# ★ கைலாசவாகன வெள்ளோட்ட விழா மலர் ★

02 - 06 - 1995

## பூர்வ புண்ணிய திருப்பணி

பர்வதவர்த்தினி அம்பாளுக்கு கயிலாச வாகனம் ஒன்றை உருவாக்கி உவகை கொள்கிறார்கள் உரும்பிராய் வடக்கு மக்கள். இவர்களின் பூர்வ புண்ணியமே இத்தகைய திருப்பணியை ஆற்றுவதற்கு வழிகாட்டியது என்பது முற்றிலும் உண்மை.

சைவத் திருக்கோயில்களில் நடைபெறும் சிற்பத் திருப்பணிகளில் புத்தூர் சிற்பக் கலைஞர் செ. பாலச்சந்திரன் அவர்களின் பங்களிப்பு மிகவும் சிறந்த முறையில் அமைகிறது என்பதை நாம் அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை
தங்கம்மா அப்பாக்குட்டி
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## 5 ஆம் திருவிழாவின் சிறப்பு

முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அருட்சக்தியாக விளங்குகின்ற அம்மை சகல வளங்களும் பொருந்திய உரும்பிராய்ப் பதியில் 'பர்வதவர்த்தினி' என்னும் திருநாமத்துடன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

இத்திருக்கோயிலில் 5ஆம் திருவிழாவைப் பொறுப்பேற்றுச் செய்துவரும் உரும்பிராய் வடக்கு வாழ் மக்கள் பெருமுயற்சியால் இயற்றப்பட்ட கைலாசவாகனத்தின் வெள்ளோட்ட விழா இன்று மாலை நடைபெற இருப்பது கண்டு மகிழ்வடைகிறேன் நிர்மாணித்த திரு செ. பாலச்சந்திரனும் குழுவினரும் பெரும் பாராட்டுக்கு உரியவர்கள்.

சிவாகமஞானபானு,
க. மு. சோமசுந்தரக்குருக்கள்.
(பிரதம சிவாச்சாரியர்)

## நற்பணிக்கு வாழ்த்துகள்

வைகாசி விசாகத்தைத் தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு இடம்பெறும் இவ்வாலய மஹோற்சவத்தில் உரும்பிராய் வடக்குப் பகுதியைச் சார்ந்தவர்கள் ஐந்தாம் திருவிழாவை ஏற்றுச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

இந்த ஆண்டு அழகு தரும் கைலாசவாகனம் ஒன்றைப் பெரும் பொருட்செலவில் இவர்கள் நிர்மாணித்திருப்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

சி. பஞ்சலிங்கம்
தலைவர்
ஆலய பரிபாலனசபை

## வெள்ளியங்கிரி வாகனம்

வெள்ளியங்கிரி வாகனமான சித்திர ரதத்தை உருவாக்குவதற்கு மூல காரணமான 5 ஆம் திருவிழா உபயகாரராகிய சைவப் பெருமக்களையும் சிற்பாசாரியார் விஸ்வப் பிரம்ம ஸ்ரீ செ. பாலச்சந்திரன் மற்றும் அவரது குழுவினரையும் நலமுடன் பல்லாண்டு வாழ அம்பாளை வேண்டிக் கொள்கிறேன்.

நா. சிதம்பரநாதர்
இளைப்பாறிய அதிகாரமளிக்க பட்ட உத்தியோகத்தர்,
முன்னாள் உரும்பிராய் பட்டினசபை.

## வேறெங்கும் காண்பதரிது

உரும்பிராயில் எழுந்தருளியிருந்து இவ்வூர் மக்களுக்கு பேரனுக்கிரகம் புரிந்துகொண்டிருக்கும் அன்னை பராசக்தி பர்வதவர்த்தினி என்னும் நாமத்தோடு விளங்குகின்றாள்.

ஆண்டுதோறும் அம்பாளுக்கு வைகாசித் திங்களில் பத்துநாள் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இதில் ஐந்தாவது திருவிழாவை உரும்பிராய் வடக்கு மக்கள் மாபெரு விழாவாகச் செய்து வருகின்றனர். இவ்வாண்டு தமது விழாவின்று கைலாச வாகனத்தில் அம்பாள் ஆரோகணித்து வீதிவலம் வர வழி அமைத்துள்ளார்கள்.

இதைப் போன்ற ஒரு கைலாச வாகனத்தை யாழ்ப்பாணத்தில் வேறெங்கும் காண்பதரிது என்று பல பேரும் பேசத்தக்க வகையில் சிறந்த சித்திரப் பாட்டோடு கூடிய மணியான கைலாச வாகனமாக இது அமைந்துள்ளது.


— கவிஞர் செ. ஐயாத்துரை.

## கைலாசவாகனத் திருப்பணிச்சபை

| | |
|---|---|
| தலைவர் | — திரு. த. சிவராசலிங்கம் |
| செயலாளர் | — திரு. வீ. புஸ்பநாதன் (இராசா) |
| பொருளாளர் | — திரு. ச. ஏகாம்பரநாதன் |
| உதவிப் பொருளாளர் | — திரு. வை. ஜெகதாஸ் |
| நிருவாகிகள்: | |
| | — திரு. சு. அப்புத்துரை |
| | — திரு. மு. இரத்தினம் |
| | — திரு. பூ. நவரத்தினம் |
| | — திரு. பொ. தருமலிங்கம் |
| | — திரு. க. துரைசிங்கம் |
| | — திரு. மா. யோகேஸ்வரன் |
| | — திரு. செ. இராசரத்தினம் |
| | — திரு. சி. பாலசுப்பிரமணியம் |
| | — திரு சீ. நவரத்தினம் |
| | — திரு. பொ. கருணாகரன் |
| | — திரு. பா. ஜெகதீஸ்வரன் [ஈசன்] |

## திவ்வியமானதோர் புனிதச் சூழலிலே பர்வதவர்த்தினியின் அருளாட்சி

கோயில் என்னும் சிறப்புக்குரிய சிதம்பரத்தில் சிவகாமியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும்,



புதிய கைலாசவாகனம்

மதுரையில் மீனாட்சியாகவும், திருக்கேதீஸ்வரத்தில் கௌரியம்பாள் ஆகவும், திருக்கோணேஸ்வரத்தில் மாதுமையாளாகவும், நகுலேஸ்வரத்தில் நகுலாம்பிகையாகவும், வண்ணையில் தையல்நாயகியாகவும், எழுந்தருளி அருள்பாலிக்கின்ற அம்பிகை உரும்பிராயில் பர்வதவர்த்தினி என்ற திருநாமத்துடன் கோயில் கொண்டு அடியார்களது அல்லலைப் போக்க அருளுகின்றார்.

உரும்பிராய் மேற்கில் அமைந்துள்ள இவ்வாலயம் பழைமையும், பெருமையும் வாய்ந்தது

உரும்பிராய், கோண்டாவில், இணுவில் ஆகிய மூன்று கிராமங்களும் சங்கமமாகும் இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது முப்புறமும் மருத நிலங்கள் சூழ பல் பயிர்களும் பல்கிப் பெருகித் தழைத்துச் செழித்தோங்குகின்ற ஒரு திவ்வியமான புனிதச் சூழலிலே அமைந்துள்ளதுதான் காட்டுப் புலத்திருப்பதி பர்வதவர்த்தனி என்பது மலையிலே வசிப்பவள் என்ற கருத்தையும் தருவதாகும்,

ஆரம்ப காலத்தில் சிறிய கோயிலாக இருந்தது இந்த ஆலயம். 1892ஆம் ஆண்டளவில் சுண்ணத்தால் சுவர் எழுப்பி ஓலையால் வேயப்பட்டது என்பர். பின்னர் காலத்திற்கு காலம் கட்டடம் விஸ்தரிக்கப்பட்டது. கர்ப்பக்கிரகஸ்தூபி இரட்டைப் பஞ்சாங்க வேலையாகச் செய்யப்பட்டுச் சமீபத்தில் மஹாகும்பாபிஷேகமும் இடம் பெற்றது.

நீண்ட காலமாகவே நவராத்திரி விழா இங்கே விசேடமாகவும், மானம்பூ முக்கிய விழாவாகவும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்தது. வைகாசிப் பூரணையை இறுதி நாளாகக் கொண்டு மஹோற்சவம் இடம் பெறும். வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரத்தேரும் உண்டு. இன்னும் பல உற்சவங்களும் இங்கே நடைபெறும். பங்குனித் திங்கள் உற்சவங்கள் குறிப்பிடத்தக்கவை.

கடந்த காலத்தில் பரிபாலன சபையினர் ஆலய வளர்ச்சி குறித்து எடுத்த நடவடிக்கைகள் பல. இப்பொழுதுள்ள பரிபாலன சபையினரும் ஆலய வளர்ச்சிக்கு ஊக்கமாக உழைத்து வருகின்றார்கள். ★

## சுக்கிர வாரத்தில் வெள்ளோட்டம் இடம் பெறுவது திருவருட்செயலே

பல ஆலயங்கள் நிறைந்து சிறந்துவிளங்குகின்ற உரும்பிராயில் பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டது போல அழகுற அமைந்திருக்கின்றது பர்வதவர்த்தினி ஆலயம் எனலாம்.

அம்பாள் பவனிவருவதற்கு ஏற்றவகையில் கைலாச வாகன மொன்றைச் சாஸ்திரோக்தமாக உரும்பிராய் வாழ் வடக்கு மக்கள் செய்வித்திருப்பதும் கைலாசவாகனத்தின் வெள்ளோட்டவிழா இன்று சுக்கிர வாரத்தில் இடம்பெறுவதும் திருவருட் செயல்களேயாம்

குறித்த கைலாசவாகனத்தை அழகுற நிர்மாணித்த சிற்பி புத்தூர் செ. பாலச்சந்திரன் அவர்களின் கைவண்ணத்தைக் கைலாசவாகனம் எடுத்து இயம்புகின்றது திருநெல்வேலியைத் திருநெல்வேலி என்பார் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர் உள்ளிட்ட அறிஞர்களையும் கலைஞர்களையும் தந்தபதி திருநெல்வேலி. பல சித்திரத்தேர்களையும், கைலாசவாகனங்களையும் பதிமானங்களையும், வாகனங்களையும் உருவாக்கியதன் மூலம் பெரும்புகழ் பெற்றவரான சிற்பாசாரி திருநெல்வேலி செல்லையா கந்தசாமி அவர்களின் சீடர்களில் ஒருவர்தான் சிற்பக்கலைஞர் செல்லையா பாலச்சந்திரன் என்பதை அறிகின்றபோது பேருவகை பிறக்கின்றது.

''நான் முன்னேறுவதற்கு எனது குருநாதர் திருநெல்வேலி செ. கந்தசாமி ஐயா அவர்கள் சிற்பத்துறை பற்றி ஊட்டிய அறிவே



திரு. பாலச்சந்திரன் ஸ்தபதி

காரணம்'' என்று நன்றிப்பெருக்குடன் கூறுவார் திரு. பாலச்சந்திரன். குரு விசுவாசம் இருந்தவாறு!

இளங்கலைஞரான திரு. செ. பாலச்சந்திரன் அவர்களை இன்றைய கைலாசவாகன வெள்ளோட்டவிழாவில் கைலாசவாகனத் திருப்பணிச்சபையினர் பாராட்டுவதுடன் ''பர்வத சிற்ப பாலன்'' என்ற கௌரவப்பட்டத்தினையும் சூட்டிச் சிறப்பிக்க முன்வந்துள்ளமை சாலவும் பொருத்தமுடையதே.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்

கைலாசவாகனம்

நிர்மாணிப்பு ஸ்தபதி
விஸ்வப் பிரம்மஸ்ரீ
செல்லையா பாலச்சந்திரன்

மற்றும் குழுவினர், ஸ்ரீ காளிகா சிற்பாலயம், புத்தூர்.

இராவணன் அமைப்பு —
திரு த. குகதாசன்

வர்ண அமைப்பு —
திரு. இ. ஜெயசிலன்

## எமது பரிபூரண நல்லாசிகள்

சைவமக்களுக்கு கைலாச பர்வதம் மிகச்சிறந்த வாய்ந்தது. பார்வதியும் பரமேஸ்வரனும் அங்கே எழுந்தருளி திருவருள் புரிகிறார்கள் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை. கைலாயக் காட்சிகளை அம்பர் பெருமான் பிரதிஷ்டையாக உருண்டு உருண்டு உடலை வருத்திச் சென்றார் என்பது வரலாறு. தசக்கிரீவன் அதன் மகிமை அறிந்து அதனை பெயர்த்தெடுக்க முயற்சித்தது நசுக்குண்டதும் அறிவோம். எனவே சிவ ஆலயங்களுக்கு முக்கியமான வாகனமிது. உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்பாளுக்கு இவ்வாகனம் உருவாக்கப் பெற்றது பொருத்தமாகும். இக்கைங்கரியத்துக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்த அன்பர்களைப் பாராட்டுகிறோம். சிற்பசாஸ்திர முறைப்படி இதனை நிர்மாணித்த ஸ்தபதியார் திரு செ. பாலச்சந்திரனை வாழ்த்துகிறோம். இதன் முதற் திருவிழா ஒரு குறையுமின்றிச் செவ்வனே நிறைவுற பர்வதவர்த்தினி அம்பாளின் திருவருள்களை உளமார வேண்டி இதில் கலந்து கொள்ளும் அன்பர்கள் அனைவருக்கும் எமது பரிபூரண நல்லாசிகளை வழங்குகிறோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

-ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்
முதல்வர், நல்லை ஆதீனம்

## திருவருள் பொலிவதாகுக

இவ்வழகிய கைலாச வாகனத்தை உருவாக்கிய திரு. செ. பாலச்சந்திரன் அவர்கள் சிறந்த சிற்பக் கலைஞராவர், அவரது கைவண்ணத்தில் உருவாகிய கலைப்படைப்புகளின் வரிசையில் இக்கைலாசவாகனம் பத்தாவது வெள்ளோட்டம் என்ற சிறப்பினைப் பெறுகின்றது

வளர்ந்து வரும் இளம் சிற்பக்கலைஞர் வரிசையில் முன்னணியில் திகழும் திரு. பாலச்சந்திரன் அவர்களது அரிய கலைப் படைப்புக்கள் பலரது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. அவருக்கு எமது மனமுவந்த பாராட்டுக்கள் உரித்தாகுக.

இச்சிவ புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்ட அடியார்களுக்கும் ஆலய அறங்காவற் சபையினர்க்கும் சிற்பக்கலைஞர்களுக்கும் அம்பிகையின் திருவருள் பொலிவதாகுக!

பேராசிரியர்
ப. கோபாலகிருஷ்ண ஐயர்
யாழ்.பல்கலைக்கழக
இந்து நாகரிகத்துறைத் தலைவர்.

## அருட் சிறப்பு வாய்ந்த தலம்

உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்பாள் கோயில் திரு அருட்சிறப்பு வாய்ந்த புனித தலம். நல்வளமுடைய உரும்பிராய் அன்பர்கள் சைவத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும் உயிராய் மதிப்பவர்கள், ஆலயத்தை அழகுபடுத்தி அருட்சக்தியை நிறைவாக்க தினமும் உழைப்பவர்கள். அவர்களது உயர் பக்தியால் பர்வதவர்த்தனி அம்பாளுக்கு இன்று கைலாச வாகனத்தை உருவாக்கி அதில் அம்பாளை எழுந்தருளச் செய்ய வேண்டும் என்ற நீண்டநாள் அவா இன்று பூர்த்தியாகிறது.

— ஆறு. திருமுருகன்

## அம்பாளை வேண்டுகிறேன்

இன்று 02-06-95 உரும்பிராய் அருள்மிகு பர்வதவர்த்தினி ஆலய கைலாசவாகன வெள்ளோட்ட விழா, வெகு சிறப்பாக நடைபெற வேண்டுமென அம்பாளை வேண்டுகின்றேன்.

த. சிவராஜலிங்கம்
தலைவர்,
கைலாசவாகனத் திருப்பணிச்சபை

## இறைவனின் இன்னருள் காட்சியை நினைவூட்டுகிறது

உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்பாள் தேவஸ்தானத்தின் கைலாசவாகன வெள்ளோட்ட தினமாகிய இன்று, வசந்தநாகபூஷணி அம்பிகையின் அருளாசியுடன் எமது தேவஸ்தானத்தின் ஆசியை வழங்குவதில் யாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

எல்லாம் வல்ல அம்பிகைக்கு இசையால் இறைவனை இசைய வைத்த இலங்கேஸ்வரனையும் இறைவனின் இன்னருட் காட்சியையும் நினைவூட்டும் வண்ணம் அமையப் பெற்ற சிறப்புமிகு கைலாச வாகனத்தினை, உரும்பிராய் வடக்கு தொண்டர்கள் மிகக் குறுகிய காலத்தில் பல லட்சம் ரூபா செலவில், சிற்பக் கலையின் சிறப்புக்கள் மிளிரும் வகையில், விஸ்வப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளோட்ட விழா வாழி!

தென்னிலங்கை வேந்தனவன் இராவணேசன்
தினவெடுத்த தோள்களினால் மலையைத் தூக்கச்
சென்னியில் கால் விரலூன்றிச் செருக்கும் தீர்த்துச்
செவியார வீணையிசை கேட்ட செம்மல்
பன்னக பூஷணனின் பத்தினி யாம்
பர்வத வர்த்தனியாள் உரும்பை வீதி
தன்னிலில் வாப்பவனிக் கைலாசத்தின்
தவழ்வாகன வெள்ளோட்ட விழாவும் வாழி!

கவிமாமணி ந. வீரமணிஐயர்
யாழ்ப்பாணம்.

இன்று (02-06-95) வெள்ளிக்கிழமை பிற் கல் 4 மணிக்கு கைலாசவாகன வெள்ளோட்ட விழா இனிது நடைபெற உள்ளது.

07-06-95 புதன்கிழமை பகல் விசேட அபிஷேகப்பூசை, திருவிழா, மாலை விசேட மேளக்கச்சேரி, இரவு பர்வதவர்த்தினி அம்பாள் புதிய கைலாசவாகனத்தில் திருவீதி எழுந்தருள்வார். பின் இராஜன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

மலர் வெளியீடு) உரும்பிராய் வடக்கு வர்த்தகர்கள்
நிதி உதவி புரிந்தோர்) 5ஆம் திருவிழா உபயகாரர்

விளம்பர இல:- (36876)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நான் ஒன்றிற்கு இரண்டு போத்தல் பால் எடுக்கும் ஆடு விற்பனைக்குண்டு. 55, ஜினியர் லேன், கலட்டி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [8570]

ஒறேசர் சலியில் அரிந்த புதிய சிமெந்து சந்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 185, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [36890]

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு தொடர்புகளுக்கு மருதம் கோழிப்பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி. [சி-1283]

## ஆண்டு 5 புலமைப்பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் 95 பரீட்சைக்கான புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது 4ஆவது ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. அடுத்த வெளியீடு 28-5-95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8559]

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்ட மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெற விரும்புபவர்களுக்கு 25% கழிவுண்டு. Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8558]

## இன்று சனி மாற்றம்

இன்று திருக்கணிதப்படி காலை 10-47 மணிவரையில் சனி மீன ராசிக்கு இடம் பெயர்கின்றது. சனிமாற்றம் ரூபா 10/-. எங்கும் விற்பனையாகின்றது. (நூலாசிரியர் சத்யா). பாடசாலை உபகரணங்கள், சஞ்சிகைகளுக்கு ஆனந்தன் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [8423]

## தவறிவிட்டது

203906 இலக்க சாரதி அனுமதிப் பத்திரம் 31-1-95 இல் இருபாலைச் சந்திக்கும், கச்சேரிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இருபாலைச் சந்தியில் உள்ள 'வைதேகி' கடையில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். [36887]

29-5-95 திங்கட்கிழமை மு.ப. 11-30 மணிபோல் யாழ்ப்பாணத்துக்கும், கோண்டாவில் சந்திக்கும் இடையில் கிட்டத்தட்ட 7'' நீளம் 5'' அகலம் உள்ள மணிபேர்ஸ் தவறிவிட்டது. அதனுள் அடையாள அட்டை [கவருடன்], டயறி சிறியது, ஒரு தொகைப் பணமும், பேனா, செபமாலை, கணக்குகள் எழுதிய துண்டுகளும் வைக்கப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருமதி அ. செபமாலை, ஓய்வுபெற்ற ஆசிரியர், சந்தை வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [8426]

## தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்லரக தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்குண்டு. மு. காங்கேசுஜயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. [36853]

## செயலகத்தில் பிறப்பு பத்திரங்கள்

யாழ்ப்பாணம் யூன், 2 தற்போது யாழ். செயலகத்தில் 54 ஆம் ஆண்டிற்கு முன் பிறந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் எழுதும் படிவங்கள் முடிந்ததை அடுத்து 'றோணியோ' செய்யப்பட்ட படிவங்களிலேயே இதுவரை பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள் வழங்கப்பட்டு வந்தன. தற்போது இதற்குரிய படிவங்கள் யாழ் செயலக பதிவுக் காரியாலயத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [க-4]

## புதிய பேரடெனியா இன்ஸ்ரிரியூட்

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

வலிகாமம், யாழ்நகர் புகழ் பூத்த, விஞ்ஞான ஆசிரியர்

திரு. இரா. செல்வவடிவேல்

திங்கள் 6 — 7 (மாலை)
வெள்ளி 6 — 7 (மாலை)

[சி-1433]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
### நல்லூர் பிரிவு

நல்லூர் பிரிவில் 1994இல் தையல் பயிற்சி முடித்த மாணவிகள் நாளை (03-06-95) சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள ஊர்காவற்றுறைப் பிரிவு பணிமனையில் நடக்கும் பரீட்சைக்குத் தோற்றும்படி அழைக்கப்படுகிறார்கள்.

அ. யே. குலசிங்கம்,
கௌரவ செயலாளர்.

(36888)

# ★ திறப்பு விழா அழைப்பு ★

யாழ். முதலீடுகளும் நிதிச்சேவைகளும் (தனியார்) வரையறுக்கப்பட்டது
இல: 169 அருச்சுனா வீதி, [ஸ்ரான்லி வீதி]
யாழ்ப்பாணம்.

நிகழும் யுவ வருடம் வைகாசித் திங்கள் 18ஆம் நாள் இன்று (02 - 06 - 1995) வெள்ளிக்கிழமை காலை 8-30 மணி முதல் வரும் சுபவேளையில் மேற்படி எமது ஸ்தாபனம் யாழ். மாநகரசபை ஆணையாளர்

திரு. V. P. பாலசிங்கம்

அவர்களால் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்படும்.

★ அன்பர்கள் ★ ஆதரவாளர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

**YARL INVESTMENTS AND FINANCIAL SERVICES (PVT) LTD.**

உங்களுக்கு எங்கள் சேவைகள்

- ★ நீங்கள் செலுத்தும் முதலீடுகளுக்கு அதி கூடிய லாபம்
- ★ வெளிநாட்டு, உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் சந்தைப் படுத்தல் (Marketing)
- ★ வர்த்தக வளர்ச்சிக்கு உதவுதல் (Business Development)

''உங்களின் வளர்ச்சியே எங்களது வளர்ச்சி''

(சி-1287)

கோண்டாவில் மேற்கு
ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய

## வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 02 — 06 — 1995 | வெள்ளிக்கிழமை | காலை | 10-15 மணி |
| சப்பரத் திருவிழா | 09 — 06 — 1995 | வெள்ளிக்கிழமை | இரவு | 7-00 மணி |
| தேர்த்திருவிழா | 10 — 06 — 1995 | சனிக்கிழமை | காலை | 8-30 மணி |
| தீர்த்தோற்சவம் | 11 — 06 — 1995 | ஞாயிற்றுக்கிழமை | காலை | 11-00 மணி |
| பூங்காவனம் | 12 — 06 — 1995 | திங்கட்கிழமை | மாலை | 6-00 மணி |

விசேட மேளம் — ஆனந்தன் குழுவினர் கோண்டாவில்

கொடியேற்ற தினத்திலிருந்து தொடர்ந்து 10 நாட்களுக்கு மாலை 8-30 — 9-30 மணிவரை

★ தெய்வீகப் பேருரை ★

நிகழ்த்துபவர்:
''கானகதாவாரிதி'' பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா
பொருள்: ''வில்லி பாரதம்''

[36889]

- தேவஸ்தான பரிபாலனசபை

# முக்கிய அறிவித்தல்

எமது இணையத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 25-06-1995ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு, எமது பணிமனையில் நடைபெறவுள்ளதென்பதை சகல வணிக கழகங்களுக்கும் அறியத்தருகின்றோம்.

யாப்பின் விதி 6, 'இ' இணங்க பிரேரணைகள் இருப்பின் அனுப்பிவைக்கவும், யாப்பின் விதி 6, 'ஈ' இணங்க நிகழ்ச்சிநிரல் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படும்.

நன்றி

செயலாளர்.
யாழ். மாவட்ட வணிக கழகங்களின் இணையம்.

(சி/1281)

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் வல்லிபுரம் செல்லையா
(லண்டன் பென்சனியர்)

மலர்வு: 18 — 03 — 1915
உதிர்வு: 13 — 06 — 1994

''வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''
அன்பையும் அறிவையும் ஊட்டி பண்பையும் - பாசத்தையும்
எமக்கு காட்டி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - எனும்
நல்வழியில் வாழ்ந்திட எம்மை ஆளாக்கி விட்ட
எம் அன்பு பப்பாவே! அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை - இறைஞ்சுகிறோம்
மரத்திற்கு அதன் மலர் சொந்தம்
மண்ணுக்கு அதன் மரம் சொந்தம்
எம் கண்களுக்கு உங்கள் உருவம் சொந்தம்
எம் நெஞ்சிற்கு உங்கள் சிந்தனை சொந்தம்
கண்ணை விட்டு கண்மணிகள் பிரிந்தன
விண்ணை விட்டு வெண்ணிலா பிரிந்தது
எம்மை விட்டு நீங்கள் பிரிந்தீர்கள்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு பிரியா
உங்கள் பிரிவால் அல்லலுறும்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

D. R. O லேன், தெல்லிப்பளை. [8409]

# 40 ஆம் நாள் நினைவு



தோற்றம்: 14 — 04 — 1938
தேற்றம்: 25 — 04 — 1995

## அமரர் X. B. மொறாயஸ்

பாசத்தை பொழிந்து அன்பாக வளர்த்திட்டு
கண்ணாக நேசித்தமனைவியிடம் ஒருவார்த்தை கூறாது
எம்மைத் தவிக்கவிட்டு
எங்கு சென்றீர்கள்?
அப்பா வாழ்வான வாழ்வை விரும்பும் நீங்கள்
எங்களை மண்ணுலகில் தவிக்கவிட்டு தனியாக
ஏனப்பா விண்ணுலகை
விரும்பிச் சென்றீர்கள்!
அப்பா என்று உங்களை அழைப்பதற்கு
மகள் நானொருவள் இருக்கிறேன் என்னை
அனாதை ஆக்கிவிட்டு
எங்கே சென்றீர்கள்!
அப்பா பாசத்தோடு வளர்த்த மகள்
இன்று நினைவுகள் இழந்து தவிக்கின்றேன்
ஆதரவின்றி தவிக்கும் மனைவி
சித்தம் தடுமாறு முன்பே சிறகடித்து
வந்து விடுங்கள் எங்கள் தெய்வமே!

தங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, மகள்.

158/1, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

இவரது ஆத்தும இளைப்பாற்றுக்கான நாளை 03-06-1995 சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

[சி-1279]

## வெள்ளோட்ட விழா சிறப்பு மலர்

# இறைவனின் இன்னருள்....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி] பிரம்ம குலத்தைச் சேர்ந்த, திறமை மிகு ஸ்தபதியாக விளங்கும், புத்தூர், ஸ்ரீ காளிகா சிற்பாலயத்தைச் சேர்ந்த இளம் கலைமாமணி செ. பாலச்சந்திரன் அவர்கள் தலைமையில், மிகவும் உன்னதமான தேர் வாகனமாகச் செதுக்கி உள்ளனர்.

இளம் கலைமாமணி, செ. பாலச்சந்திரன் அவர்கள் இளம் வயதிலேயே அரும் பெரும் பணிகளை ஆற்றியவர் என்பதும், எம் ஆதீனத்தில் அருள்மிகு வசந்தநாக பூஷணி அம்பிகைக்கு அழகிய தேர் சிற்பக்கலையின் செழுமை மிளிரும் சித்திரத் தேரினை ஆக்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அருள்மிகு அம்பிகையின் பெரும் பணிகளில் ஒன்றாக விளங்கும் கைலாச வாகன வெள்ளோட்ட தினமாகிய இன்று அருள்மிகு பர்வதவர்த்தனி அம்பிகையின் அடியார்கள் தொண்டர்கள் அனைவருக்கும், சிற்பாசாரியார் அவர்களுக்கும், எல்லாம்வல்ல வசந்தநாகபூஷணி அம்பிகையின் இன்னருள் கிட்டவும் மென்மேலும் உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்பிகையின் ஆலயம் திருவருட் சிறப்புடன் திகழவும் எல்லாம் வல்ல அருள்மிகு வசந்தநாகபூஷணியின் தாழ் பணிந்து வணங்கி வாழ்த்துகிறோம்.

ஏழாலை
ஸ்ரீவசந்த நாகபூஷணி
அம்பாள் தேவஸ்தானம்

# முழு மூச்சுடன் உழைத்தோர்

பர்வதவர்த்தினி அம்பாளின் மகோற்சவ காலத்தில் 5ஆம் திருவிழாவைச் செய்யும் உரும்பிராய் வடக்கு உபயகாரர் ஒரு சிவப்பணியில் இறங்கி மிகக் குறுகிய காலத்தில் யாழ் மாவட்டத்திலேயே பெரிய அளவில் ஒரு கைலாச வாகனத்தை உருவாக்கியுள்ளனர். இப்பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென திருவாளர்கள் ப. ஜெகதீஸ்வரன் (ஈசன்), பொ. கருணாகரன் ஆகிய இருவரும் முன்னின்று 11-7-94 இல் ஒரு திருப்பணிச்சபையை உருவாக்கி, 9-8-94 செவ்வாய்க்கிழமை ஆடிப்பூரம் அன்று முதல் முதலில் பணத்தை வசூலிக்கத் தொடங்கி 19-8-94 வெள்ளிக்கிழமை அன்று சிற்பக் கலைஞர் உடன் ஒப்பந்தம் செய்து இப் பணியை ஆரம்பித்தனர். இப்பணிக்கு முழு மூச்சுடன் உழைத்தவர் திருப்பணிச் சபையின் செயலாளர் திரு. வி. புஸ்பநாதன் அவர்கள் என்றால் மிகையாகாது.

திருப்பணிச்சபையின் தலைவர் திரு த. சிவராசலிங்கம் அவர்கள் கைலாசவாகனத் திருப்பணிக்கு எடுத்த முயற்சிகளோ மிகப்பல, பக்கபலமாக நின்று உதவியவர்கள் திரு. பொ. கருணாகரன், பா. ஜெகதீஸ்வரன், திரு. சு. அப்புத்துரை ஆகியோர் ஆவர். இத்துடன் குறுகிய காலத்தில் தனது ஒப்பந்தத்தின்படி 9 மாத காலத்திற்குள் போர்க்கால சூழலிலும் இப்பெரிய பொறுப்பான பணியை உரிய காலத்தில் முடித்துத் தந்துதவிய இளம் சிற்பக்கலாமேதை திரு. செல்லையா பாலச்சந்திரன் அவர்களை வாழ்த்தி ஆசி வழங்குவதில் எமது திருப்பணிச்சபை பெருமை அடைகிறது.

இத்திருப்பணிக்கு இன்முகத்துடனும், தாராளமனப் பான்மையுடனும், பணத்தை வாரி வழங்கிய உரும்பராய் வடக்கு வாழ் மக்களின் சிறப்பினையும் போற்றுகிறோம்.

ச ஏகாம்பரநாதன்
பொருளாளர்,
கைலாசவாகனத் திருப்பணிச் சபை,
உரும்பிராய் வடக்கு.

# முக்கிய அறிவித்தல்

எமது நல்லூர் வணிகர் கழகத்துக்குட்பட்ட அனைத்து துறை வர்த்தகர்களும் எமது கழகத்தில் அங்கத்துவம் வகிக்க வேண்டும்.

எமது கழக எல்லைக்குட்பட்ட தேநீர்க் கடைகள், சிற்றுண்டி சாலைகள், மிதிவண்டி திருத்தும் கடைகள், மருந்துக் கடைகள், ரயர் கடைகள் தவிர ஏனைய வர்த்தக நிலையங்கள் யாவற்றையும் சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியிலிருந்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் முழுமையாக பூட்டி அனைத்து வர்த்தகர்களையும் கழகத்துடன் ஒத்துழைக்கும்படி வேண்டுகின்றோம்.

வருவாய் துறையில் பதிவு செய்துள்ள வாணிபம் தவிர ஏனைய வியாபாரங்களையும் [சனிக்கிழமை 2-00மணி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் வியாபாரம் செய்தல் தவிர்க்கப்பட வேண்டும். இதை மீறுவது எமது கழக சட்ட விதிக்கு முரணானது என்பதை அறியத்தருகின்றோம்.

பலசரக்கு கடைகளில் பத்திரிகை வியாபாரம் செய்பவர்கள் தயவு செய்து கடைகளை பூட்டி கடைக்கு வெளியே பத்திரிகைகளை விற்கும்படி வேண்டுகின்றோம்.

செயலாளர்,
நல்லூர் வணிகர் கழகம்.

(சி-1288)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 29 — 04 — 1978
இறைவன் அடியில்: 01 — 05 — 1995

## செல்வி புவனா வல்லிபுரம்
[எழுதுமட்டுவாள்-ஸ்ரீகணேச மகாவித்தியாலய மாணவி]

பண்புடனும் அன்புடனும்
பதியினிலே உலவி வந்தாய்
பரிதவிக்க எமை விட்டு
பரமனடி போனாயோ
கனிவான உன் வதனம்
காண்போமோ எம் வாழ்வில்
காலமெல்லாம் கண்ணீருடன்
கலங்குகின்றோம் கதறுகின்றோம்.

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

பெற்றோர், சகோதரர்,
உறவினர்.

எழுதுமட்டுவாள்.

(36886)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பெறுமதியான 'உதவி

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள உயர்தர மாணவர்களுக்கான பாடக் கருத்தரங்குகளை மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது ஆதரவில் நடத்தவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கற்பித்தலில் திறமை வாய்ந்த விசேட ஆசிரியர்களைக் கொண்டு தொடர்ச்சியாக இப் பாடக் கருத்தரங்குகள் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இந்தச் செயற்பாடு ஒரு நல்ல முன் மாதிரியாகும். ஏனைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இது போன்ற சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது அவசியம்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அமைப்புகள். பிரதானமாக உணவுப் பொருள்களும் பொதுவாக ஏனைய பாவனைப் பொருள்களும் மக்களுக்கு — பாவனையாளர்களுக்கு — நியாய விலைகளில், தட்டுப்பாடின்றிக் கிடைக்க உதவுவதே அவற்றின் இப்போதைய முக்கிய இலக்குகளாகும்.

வட பகுதியைப் பொறுத்த வரையில், ஐந்து வருடகாலப் போர்ச் சூழ்நிலையில் உணவுப் பொருள் விநியோகத்திலும், ஏனைய பாவனைப் பொருள் விற்பனையிலும் ப.நோ.கூ. சங்கங்கள் மக்களுக்கு நற்பணி ஆற்றி வருகின்றன.

கூட்டுறவுக்குப் பெயர் போனது வடக்கு. மக்களுக்கு நலன் செய்யும் ஓர் இயக்கமாக ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்தது. உணவு விநியோகத்தில் மட்டுமன்றி விவசாயம், சேமிப்பு, வைத்திய சேவை என்று பல துறைகளிலும் அது பெயரளவில் அன்றிச் செயலளவில் மக்கள் நலன் நாடி உழைத்தது; மக்கள் மதிப்பையும், பங்களிப்பையும் பெருமளவில் பெற்றது.

ஆனால் இடைக்காலத்தில் அது ஊழல் பேர்வழிகளின் குகையாக மாறிக் குட்டிச் சுவராகிப் போனதும் உண்டு. 1990 ஆம் ஆண்டில் யுத்தம் ஆரம்பமானதோடு கூட்டுறவுத்துறை மீண்டும் புத்துயிர் பெற்றது எனலாம்.

கூட்டுறவுச் சங்கங்கள் தமது வர்த்தகத்தின் மூலம் பெறும் லாபம் மக்களுடைய பணமே. எனவே அது மக்களுக்கான சேவைகளுக்கு ஆக்கபூர்வமான முறையில் செலவிடப்பட வேண்டும்.

இன்றைய போர்க் காலசூழ்நிலையில் மக்களுக்குரிய வசதிகள் மிகவும் குறைந்து விட்டன; அரசின் சேவைகள் தேய்ந்து விட்டன. அதனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற நிறுவனங்கள் மக்களின் முக்கிய தேவைகளை இனங்கண்டு அவற்றை வழங்க முன்வர வேண்டும்.

கல்வி, சுயதொழில், சிறுகைத்தொழில், சுகாதாரம், வைத்தியம், போசாக்கின்மை நிவர்த்தி, பயிர்ச்செய்கை ஆகிய துறைகளில் மக்களுக்கு உதவ — சேவையாற்ற — பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் பணியாற்ற வேண்டும்.

இந்த உதவிகள், சேவைகள் அந்தந்தப் பகுதியின் தேவைக்கு ஏற்ப அமைந்தாலே அதனால் மக்களுக்கு உரிய பயன் கிடைக்கும். வடமராட்சி கிழக்கு கல்வி வசதி குன்றிய பகுதி. எனவே அங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, உயர்கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் மருதங்கேணி ப.நோ.கூ. சங்கம் உதவ முன் வந்தமை பொருத்தமானதும் பயன் தருவதுமாகும்.

ஏனைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், தமது பகுதி மக்களின் முக்கிய தேவைகளை இனங்கண்டு, திட்டமிட்ட முறையில் பொருத்தமான உதவிகளைச் செய்ய வேண்டும். அந்தத் திட்டங்கள் ஒரு சிலரின் நலன்களைக் கருத்தில் கொள்ளாமல் இயன்றளவு பரவலான முறையில் மக்களுக்கு உதவுவனவாக இருக்க வேண்டும்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்று மட்டுமன்றி, ஏனைய பொது நல அமைப்புகளும் தமது நிதிவசதிக்கேற்ப உதவி தேவைப்படுவோருக்கு இயன்றளவு உதவ வேண்டும் என்ற இலக்குடன் செயலாற்றினால் மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவலாம்.

# மட்டு.காட்டுப்புற முகாம்களில் இருந்து இரவில் படையினர் ஷெல் வீச்சு!

## பொதுமக்கள் பலர் காயம்!

கொழும்பு, ஜூன் 2

தரவைக்குளம் இராணுவ முகாம் தாக்குதலுக்கு உள்ளானதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் காட்டுப்பகுதி முகாம்களில் இருந்து படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

காட்டுப் புறங்கள் மீதும், வயல் வெளிகள் மீதும் கண்மூடித்தனமாக நடத்தப்படும் ஷெல் வீச்சினால் பொதுமக்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

கடந்த திங்களன்று இரவு புலிபாய்ந்தகல் இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஆலையடிச்சேனை கிராமத்தில் விழுந்து வெடித்தது. அதனால் தந்தையும் மகனும் காயமடைந்தனர்.

பிள்ளையார் செல்வம் [வயது 40], அவரது மகனான செல்வம் சுட்டா [வயது 5] ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

இரவு வேளைகளில் ஷெல்கள் ஏவப்படுவதால் எங்கும் மக்கள் பயப்பீதியுடன் இரவைக் கழிக்கின்றனர்.

இதேவேளை—

காடுகளில் இராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருவதால் அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன.

ஒரே சமயத்தில் மூன்று ஹெலிகள் காட்டுப்பகுதிகளுக்கு சென்று திரும்பி வருவதை அவதானிக்க முடிவதாக கொழும்பு பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி உள்ளது.

காட்டுப்பகுதியில் குண்டுச் சத்தங்கள் கேட்பதால் வயல் வேலைக்குச் செல்ல விவசாயிகள் அஞ்சுகின்றனர். (ஐ)

# திம்புலாகல பகுதியில் இருந்து 300 குடும்பங்கள் இடம் பெயர்வு

## நிரந்தர இராணுவ முகாம் அமைக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 2

திம்புலாகல தேரர் சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்து அங்குள்ள மகாவலி ''பி''வலயத்தில் குடியேற்றப்பட்ட 300 குடும்பங்களும் அங்கிருந்து வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு அச்சம் காரணமாகவே அவர்கள்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

இதனை அடுத்து இப் பிரதேச மக்களின் பாதுகாப்பு கருதி நிரந்தர இராணுவ பிரிவைஇப்பகுதியில் அமர்த்த வேண்டும் என்று ஐ.தே.க.வைச் சேர்ந்த எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ-5)

# கலவரத்தைத் தூண்ட தீய சக்திகள் முயற்சி!

## பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 2

நாட்டில் தற்போது தோன்றியிருக்கும் சூழ்நிலையைப் பயன்படுத்தி, இனக்கலவரத்தை தூண்ட முயற்சிக்கும் தீயசக்திகளின் நடவடிக்கைகள் குறித்து விழிப்பாக செயல்பட்டு, கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

—இவ்வாறு பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா, மாகாணப் பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் சுப்ரின்டன்கள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பிலும், ஏனைய பிரதேசங்களிலும் இனக்குரோதத்தை தூண்டும் வகையிலான சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளது; இது சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்படுகின்றன.

'சிங்களவர்களே நித்திரையில் இருந்து எழும்புங்கள்'' ''பிரபாகரனின் கோரப்பிடியில் இருந்து நாட்டைகாக்க இளைஞர்களே முன் வாருங்கள்'' —இவ்வாறான சுவரொட்டிகள் கொழும்பு நகரின் பிரதான பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ-5)

# இந்து சமுத்திரம் இந்தியாவின் மேற்பார்வையில் இருக்கவேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன் கூறுகிறார்

சென்னை, ஜூன் 2

இந்து சமுத்திரத்தை இந்தியா மேற்பார்வை செய்ய வேண்டும்—என்று முன்னாள் இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் கூறினார்.

''இந்து சமுத்திரத்தில் யுத்தம்'' என்ற தலைப்பில் வைஸ் அட்மிரல் மிஹிர் கே. ராய் எழுதிய நூல் வெளியீட்டு விழாவில் திரு வெங்கட்ராமன் உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்திய இராணுவத்திட்டமிடலாளர்களும் யுத்த தந்திரிகளும் இந்தியாவின் புவியியல், அரசியல் பொறுப்புகளை மனதிற் கொண்டு, வெளிவல்லரசுகள் இந்து சமுத்திரத்துக்குள் ஊடுருவுவதைத் தடுக்க வேண்டும்.

இப்பிராந்தியத்தின் மற்ற நாடுகள் சிறியவையாகவும் வறியவையாகவும் இருக்கின்றன. அவை தம்மைப் பாதுகாக்க இந்தியாவின் உதவியை நாடி நிற்கின்றன.

மாலைதீவின் தலைவர் அந்நிய கூலிப்படையினர் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியைத் தோற்கடிக்க இந்தியாவின் உதவியை நாடியபோது நாம் உடனடியாக அந்த உதவியை வழங்கினோம்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இத்தகைய கடமைகளை இந்தியா செய்வது என்றால் இன்றைய அதன் தற்காப்பு நிலையை மாற்றி பெரிதும் முன்னுக்குச் செல்லும் நிலைமைக்கு செல்ல வேண்டும் என்று அவர் கூறினார்.

இந்த நூல் வெளியீட்டு விழா சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. [க]

# விடுமுறை தினங்களைக் குறைக்கும் அரசின் யோசனைக்கு எதிர்ப்பு!

கொழும்பு, ஜூன் 2

விடுமுறை தினங்களை குறைப்பது தொடர்பான அரசின் யோசனைக்கு, சில தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் (சி.எம்.யூ.), அரச சேவை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம் ஆகியனவே இவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்தன.

இது தொடர்பாக இச்சங்கங்களின் பொதுச் செயலாளர்கள், விடுமுறை குறைப்பு தொடர்பாக ஆராயும் குழுவின் தலைவரான, பிரதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் லஷ்மன் கிரியெல்லவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தின் சாரம் வருமாறு:

சர்வதேச சந்தையில் போட்டியிடுவதற்கான ஆற்றல் அதிகரிக்கும், உற்பத்தி பெருகும், தொழிலாளர்களும் சாதாரண பிரஜைகளும் பெருமளவு பயனடைவர் போன்ற காரணங்களைக் காட்டியே, விடுமுறை குறைப்பு யோசனை முன்வைக்கப்பட்டது.

ஆனால் இத்தகைய விடுமுறை குறைப்பினால், இலாபமடையப்போவது கைத்தொழில் வர்த்தக தொழிலதிபர்கள் குழுவே.

இதுவே சகல தொழிற் சங்கங்களினதும் அபிப்பிராயமாக இருக்கிறது.

தற்போது நடைமுறையில் உள்ள விடுமுறைகளில் பலவற்றை கைத்தொழில் வர்த்தகத்துறை தொழிலாளர்கள் அனுபவிக்கவில்லை.

எனவே எதிர்கால விடுமுறைக்குறைப்பினால் அவர்கள் பயனடையப் போவதில்லை.

அதே சமயம், பௌத்தர்களுக்கு முக்கியத்துவமுடைய போயா விடுமுறை தினங்களில் எந்தவித மாற்றமும் செய்ய உத்தேசிக்கப்படாத நிலையில், ஏனைய மதத்தினரின் முக்கியத்துவம் வாய்ந்த தினங்களிலான விடுமுறைகளை குறைக்கும் பாங்கிலான செயற்பாடுகள், அரசியல் மற்றும் மதக்குரோதங்களை மேலும் தூண்டுவதாகவே முடியும் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## மீண்டும் மோதல் மூண்டது குறித்து

# கவலை தெரிவித்து பாப்பரசர் செய்தி

கொழும்பு, ஜூன் 2

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், இலங்கை கத்தோலிக்க மேற்றிராணிமார் சங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி ஒன்றில் —

இலங்கையின் வடக்குப் பகுதியில் மீண்டும் மோதல்கள் ஆரம்பித்துள்ளமை குறித்தும், வன்செயல்கள் நடந்துள்ளமை குறித்தும், தாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை —

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை முறிவடைந்து, சமாதானப் பேச்சுவார்த்தை தடைப்பட்டதைத் தொடர்ந்து, பெறுமதி வாய்ந்த மனித உயிர்கள் இழக்கப்படுவது குறித்து இலங்கை கத்தோலிக்க மேற்றிராணிமார் சங்கம் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் தெரிவித்துள்ளது.

நாட்டில் மோசமடைந்து வரும் பிரச்சினைகளுக்கு ஆயுதங்களின் மூலம் தீர்வு காண முடியாது என்பதையும், ஆயுதப் போராட்டம் மக்களிடையே பதற்றத்தையே ஏற்படுத்துகிறது என்பதையும் சமீபகால அவல நிலைமை எடுத்துக்காட்டுகிறது என்று கத்தோலிக்க மேற்றிராணிமார் சங்கம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## புலிகளின் குரல் வானொலியில்

வெள்ளி இரவு
02 — 06 — 1995

- ★ 8-02 — கலைமஞ்சரி — அறிமுகம் அறிமுகமாவது தமிழ்த்தாய் வெளியீடான — ''வானம் எம் வசம்'' கவிதைத் தொகுதி சிறுகதை செல்வி பிறேமினி சபாரட்ணம் எழுதிய ''பிசாசுகள்'', கவிதை. தமிழ்க்கவி எழுதிய, ''உன்னை நீ காப்பாற்று''
- ★ 8-25 — கண–பொழுது— நாமகன் எழுதிய ''கப்டன் ஜேசுதாஸ்''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தாயகப் பாடல்கள்
- ★ 8-50 — ஏர்முனை— நிகழ்ச்சியில் ''உலக சூழல் தினம்'' சித்திரம்

03 — 06 — 1995
சனி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலியில்

வெள்ளி மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-08 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — கணநேரக் காவியங்கள்
- ★ 5-30 — மண்ணின் குரல்
- ★ 5-40 — நேயர் கடிதம்
- ★ 5-45 — வெற்றிச் சுவடுகள்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — தொடர் நாடகம் ''பொம்பிளை பார்க்கப்போறோம்'' அங்கம் — 04
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-25 — என் தெரிவு

## கிராமிய செயற்திட்டங்கள்

ஜப்பான் நாட்டு உதவியுடன் சுமார் 12கோடி ரூபா செலவில் தென்மராட்சிப் பகுதியில் உணவு உற்பத்தி சம்பந்தமான செயற்திட்டங்கள் கிராமிய அபிவிருத்திப் பிரிவினரால் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான விவரங்கள் பிரதேச செயலகத்தினால் வடக்கு — கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப் பிரதேசத்தில் உள்ள 30 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலமும் 30 செயற்திட்டங்கள் மேற் கொள்ளப் படவுள்ளன. (க-117)

## பொலனறுவ பாடசாலைகளுக்கு விடுமுறை

திம்புலகல விகாராதிபதி காலஞ்சென்ற சீலாலங்கார தேரருக்கு அஞ்சலி செலுத்து முகமாக பொலனறுவ பாடசாலைகளுக்கு இன்று ஜூன் 2 விடுமுறை [illegible] வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் [illegible] செய்யப்பட்டுள்ளது. (க)

# தொலைத் தொடர்பு நிலைய பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு, ஜூன் 2

மட்டக்களப்பு தொலைத் தொடர்பு நிலையத்திற்கு (ரெலிகொம்) விசேட பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில், வவுனியா தொலைத் தொடர்பு கோபுரம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. அதனை அடுத்தே, மட்டக்களப்பு ''ரெலிகொம்'' நிலையத்திற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக ஆராயும் பொருட்டு, பொலீஸ் உயரதிகாரிகள் குழுவொன்று மட்டக்களப்பு ''ரெலிகொம்'' நிலையத்தை பார்வையிட்டது.

தொலைத் தொடர்பு நிலைய வளவில் விசேட பொலீஸ் காவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

தகவல் பரிவர்த்தனை உபகரணம் வீதியோரத்தில் அமைந்துள்ளதால் வீதியோர மதிலை உயர்த்திக்கட்டும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# கடை உரிமையாளர்கள் உட்பட ஏழு பேர் கைது!

## புலிகளுடன் தொடர்புடையோராம்

கொழும்பு, ஜூன் 2

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற பெயரில் புத்தளம் பகுதியில் கடந்த ஞாயிறன்று ஏழு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் மூவர் நகைக்கடை உரிமையாளர்களாவர். ஒருவர் பலசரக்குக் கடை உரிமையாளர்.

விசாரணைக்காக இவர்கள் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

புத்தளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.பி. விண்டன் தலைமையிலான பொலிஸ் குழுவினரே இவர்களை கைது செய்தனர். (ஐ)

# வாகரை பஸ் சேவை முற்றாகத் துண்டிப்பு!

## சாரதிகள் கடமைக்கு செல்ல அச்சம்

மட்டக்களப்பு, ஜூன் 2

பாதுகாப்பற்ற நிலையில், சாரதிகள் வாகனம் ஓட்ட மறுத்து வருவதால் வாகரைப் பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பனிச்சங்கேணியில் படையினர் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்றை அடுத்து, அங்கு சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டு, படையினரால் தாக்கப்பட்டார்.

இதனால் அச்சம் கொண்டுள்ள சாரதிகள் அங்கு போக்குவரத்து சேவையில் ஈடுபட மறுத்துவிட்டனர்.

இதனால் அங்குள்ள மக்கள் தமது பயணங்களை மேற்கொள்ள முடியாமல் உள்ளதுடன், உணவுப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. (ஐ-5)

# தேரருக்கு அஞ்சலி செய்த தமிழ்ப் பெண் கொலை!

அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட திம்புலாகல தேரரின் பூதவுடலை பார்வையிட்டு அனுதாபம் தெரிவித்து விட்டுத் திரும்பிய தமிழ்ப் பெண் ஒருவர் அவரது வீட்டில் வைத்து துப்பாக்கியால்சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பொலனறுவையில் உள்ள தமிழ்க் குடியிருப்பான நாவலப் பொக்குனையில் வசிக்கும்தங்கப் பிள்ளை என்ற பெண்மணியே இவ்வாறு கொல்லப்பட்டவர் ஆவார். (ஐ-5)

# கடவுளை அடைவது நடைமுறைச் சாத்தியமா?

யார் தலைவன்? பரம் பொருளையா கூறினார்கள். ஆகா! அவரை எங்கே காணோம்! பார்க்குமிடமெலாம் நீக்கமற நிறைந்திருக்கிறார் பரம்பொருள் என்கிறார்களே! அகிலாண்ட கோடிப் பிரமாண்ட நாயகன் என்றெல்லாம் கூறிமகிழ்கிறார்களே! என்ன அதிசயம் அவரையும் அடையலாமா? அது நடைமுறைச் சாத்தியமா?

இவ்வாறெல்லாம் வினா எழுப்புபவர்க்கு அருமையான

### ஞானக்கதிர்

விடையை அப்பர் அடிகள் தந்துள்ளார்கள்.

விறகில் தீ போலவும், பாலில் பொருந்திய நெய் போலவும், மாமணிச்சோதியானாகவும் இறைவன் மறைந்துள்ளான். உறவு எனும் கோலை நட்டு உணர்வு என்ற கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்தால் முன்நின்று அருள் வழங்குவான். ஆன்மா மூவகை ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலமுடைய ஆன்மாக்களை சகலர் என்றும், இரு மலமுடைய ஆன்மாக்களை பிரளயாகலர் என்றும், ஒரு மலமுடைய ஆன்மாக்களை விஞ்ஞானகலர் என்றும் அழைப்பர்.

மும்மலமுடைய ஆன்மாக்களுக்கு கடின வழிபாட்டின் பின், விறகில் தீ, முறுகவாங்கிக் கடைய தீ அடைவது போலவும், இருமலமுடைய ஆன்மாக்களுக்கு பாலில் தயிராக்கி வாங்கிக்கடைய நெய் வெளிப்படுதல் போலவும், ஒரு மலமுடைய ஆன்மாக்களுக்கு கல்லில் கடையமணி ஒளியுடன் சோதியாக வெளிப்படுதல் போலவும் கடவுள் காட்சி தந்தருளுவான் என்பதை விளக்கினார்.

இது எப்படிச் சாத்தியமாகும்! ஆன்மாக்கள் அன்பும் சிவமும் இரண்டென உணராமல் ஒன்றென்று உணர்ந்த பின் உறவை ஏற்படுத்தி, உறவு எனும் கோலை நட்டு, உணர்வு எனும் கயிற்றினால் முறுக வாங்கிக் கடையவும், கடையவும் விறகில் தீ போன்றும், பாலில் நெய் போன்றும், மணியில் ஒலி போன்றும் இறைவன் தோன்றுவான் என்பதாம்.

சம்பந்தப் பெருமானின் திருமண நன்நாளில், இச் சோதியினுள்ளே புகுக எனத் திருவாய் மலர்ந்த, சோதியாகத் தோன்றினாரே! ஆதியும் அந்தமில்லா அரும்பெருஞ் சோதியாக பிரம விட்டிணுவுக்கு முன் தோன்றினாரே! சேக்கிழார் வாக்குப்படி ஒரு மல முடையவருக்கு அலகில் சோதியனாக இறைவன் காட்சி தருவான்.

முக்காலமும் உணர வல்ல முனிசிரேட்டர்களும், நாயன்மாரும் இவ்வாறே இறைவனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வழிபட்டு உய்தி பெற்றனர்.

அப்பர் அடிகள் இதனைப் பின்வருமாறு கூறுகிறார்.

''விறகிற் றீயினன் பாலிற் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே''

சைவப்புலவர். பொன். தெய்வேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ மா, 3 கிலோ சீனி

## மண்ணெண்ணெய் 2 லீற்றர்

யாழ்ப்பாணம், ஜூன் 2
ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ மா, 3 கிலோ சீனி ஆகியவற்றை பங்கீட்டு அடிப்படையில் — கட்டுப்பாட்டு விலையில் — பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு யாழ். செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை 2 லீற்றர் மண்ணெண்ணெய் இம்முறை விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)


## இசை வாத்தியங்கள் தேவை

* வயலின் * ஒகன் (சிறியது)
* ஆர்மோனியம்

மேற்கண்ட இசைவாத்தியங்கள் தேவை. வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்



உ

கோண்டாவில்கிழக்கு
திருவருள்மிகு
ஸ்ரீ ஞானப்பழனி முருகன்
தேவஸ்தான

## மகோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம் | 02-06-1995 வெள்ளிக்கிழமை |
| மாம்பழத் திருவிழா | 07-06-1995 புதன்கிழமை |
| கைலாசவாகனத் திருவிழா | 08-06-1995 வியாழக்கிழமை |
| சப்பறத் திருவிழா | 09-06-1995 வெள்ளிக்கிழமை |
| தேர்த் திருவிழா | 10-06-1995 சனிக்கிழமை |
| தீர்த்தத் திருவிழா | 11-06-1995 ஞாயிற்றுக்கிழமை |
| திருக்கல்யாணம் | 12-06-1995 திங்கட்கிழமை |

02 - 06 - 1995 — 12 - 06 - 1995 வரை தினமும் இரவு 8 மணிக்கு
கலைவாணி வில்லிசைக் குழுவினரின்
* மகாபாரதம் *
வில்லிசை நிகழ்ச்சி இடம்பெறும்.

ஸ்ரீ ஞானப்பழனி முருகன்
பரிபாலன சபை.

அன்பளிப்பு:
சுதா எரிபொருள் நிலையம்
கோண்டாவில் கிழக்கு.
[36896]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகாலட்சுமி மாசிலாமணி

கிளானை தொல்லங்கலட்டியைச் சேர்ந்த திருமதி மகாலட்சுமி மாசிலாமணி 01-6-95 வியாழன் மாலை 3.80 மணியளவில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னக்கண்டு மாசிலாமணி [சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்] அவர்களின் அன்பு மனைவியும். இராசேஸ்வரி, முருகதாஸ், றமணதாஸ், சிவதாஸ், குகதாஸ் [மகாஜனக் கல்லூரி உயர்தர மாணவன்] ஆகியோரின் தாயாரும், திரு. நடராசா, உஷாநந்தினி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [02-6-95] வெள்ளி நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
சி. கந்தசாமி [M. L. T]
[மைத்துனர்]

தற்காலிக முகவரி,
ஸ்ரேசனடி, சுன்னாகம். [36894]

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

(தங்கோடை, காரைநகர்)

வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் கனடாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னக்குட்டியின் மகனும், காமாட்சியின் அன்புக் கணவரும், தேவசகாயம்பிள்ளை, கணேசமூர்த்தி, பத்மசுலோசனா, இராசசுலோசனா, செல்வநாயகம், செல்வநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
இ ஆ. கோவிந்தபிள்ளை
(சகலன்)

71, செட்டித்தெரு,
நல்லூர். (36892)

## திருமதி மல்லிகாதேவி பத்மநாதன்

திருமதி மல்லிகாதேவி நேற்று (1-6-95) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மநாதனின் அன்பு மனைவியும், தயாளன், பிரசாந்தி ஆகியோரின் அன்புத்தாயாரும், ரஞ்சிதகுமார் [சுவிஸ்], கலைச்செல்வி, பாலகுமாரன், சுமதி ஆகியோரின் சிறிய தாயாரும், காலஞ்சென்ற தவமணி பத்மநாதன் மற்றும் பாக்கியலட்சுமி, திவாகரமூர்த்தி, காலஞ்சென்ற சிறிபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலகுமாரனின் மாமியும், தக்ஷாயினி, குக்ஷாயினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது தகனக்கிரியை இன்று (2-6-95) 1 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
பொ பத்மநாதன்
(கணவன்)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில் [36897]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

# ஸ்ரீலங்கா ஒற்றையாட்சி நாடு; சமஷ்டி நாடாக மாற்றமுடியாது!

## ஜனாதிபதி வேட்பாளர் ஹரிச்சந்திரா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 2
ஒற்றையாட்சி முறை உள்ள ஒரு நாட்டை சமஷ்டி அரசு முறைக்கு மாற்றமுடியாது.

வேண்டுமானால் ஸ்ரீலங்காவை மாலைதீவுடன், இந்தியாவுடன், பாகிஸ்தானுடன் அல்லது வேறு ஒரு நாட்டுடன் சமஷ்டி முறைக்கு உட்படுத்தலாம் அது வேறு.

ஆனால் வடக்கு—கிழக்குடன் சமஷ்டி முறைக்கு உட்படுத்த முடியாது வடக்கு—கிழக்கு ஸ்ரீலங்கா என்ற ஒற்றையாட்சி நாட்டின் ஒரு பகுதியாகும். அப்படியிருக்க அதனை எவ்வாறு ஸ்ரீலங்காவுடனேயே சமஷ்டிக்கு உட்படுத்தலாம்?

இவ்வாறு கேட்டார் சிங்கள மகா சம்மத பூமி புத்திரக் கட்சியின் தலைவர் திரு. ஹரிச்சந்திரா விஜேதுங்கா.

கொழும்பு சட்டக் கல்லூரி மாணவர் மன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு சொன்னார்.

கொழும்பு சட்டக் கல்லூரி மாணவர் மன்றத்தினர் விசேட கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து—

அதில் பேசுவதற்கு வெவ்வேறு கருத்துடைய ஏழு பிரமுகர்களை அழைத்திருந்தனர். அவர்களில் மிகுதி ஆறு பேரும் கூட்டத்துக்கு வரவில்லை. கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்த ஹரிச்சந்திரா, விஜேதுங்கா மட்டுமே வந்திருந்தார்.

கலாநிதி சரத் அமுனுகம எம். பி. திலக் கருணாரத்னா எம். பி. டக்ளஸ் தேவானந்தா எம். பி, விக்டர் ஐவன், விமல சிறி கம்லத் (ஜே. வி. பி), சார்ள்ஸ் அபயகுலசேகரா ஆகியோரே பேச அழைக்கப்பட்டும் கூட்டத்துக்குச் சமுகமளிக்காதோராவர்.

திரு ஹரிச்சந்திரா மேலும் கூறியதாவது:

ஸ்ரீலங்கா நாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வருகிறது. வடக்கும் கிழக்கும் அந்த நாட்டின் பகுதிகளாகும்.

இப்போதைய அரசாங்கம் பரிசீலனை செய்து வரும் சமஷ்டித் தீர்வு நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து வடக்கையும் கிழக்கையும் பிரித்து எடுப்பதாகும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா வடக்கையும் கிழக்கையும், அவசரகாலச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் மூலமே இணைத்தார்.

எனவே வர்த்தமானி அறிவித்தல் மூலமே அந்த இணைப்பை இல்லாமல் செய்ய முடியும். ஆனால் ஜே. ஆருக்குப் பின்னர் பதவிக்கு வந்தவர்கள் வர்த்தமானி மூலம் வடக்கு - கிழக்கு இணைப்பை ரத்துச் செய்யத் தவறிவிட்டனர்.

ஸ்ரீலங்காவில் முன்னர் மூன்று நிர்வாகப் பிரிவுகளே இருந்தன. பிரிட்டிஷ்காரர்கள் பிரித்தாள்வதற்காக நாட்டை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தனர். ஆனால் நாட்டில் இப்போது எத்தனை மாகாணங்கள் உள்ளன என்பது எவருக்கும் தெரியாது.

வெள்ளைக்காரன் தந்ததையே நாம் ஏற்க வேண்டும் என்பதல்ல. நாம் எமது விருப்பத்திற்கு ஏற்ப எதனையும் தெரிவு செய்யலாம்.

வடக்கிலிருந்து சில எம்.பிக்கள் ஆறு வாக்குகளாலும் தெரிவு செய்யப்பட்டனர். அரசமைப்பை மாற்றுவதற்கு அவர்களுக்கு என்ன தகுதி உண்டு? — என்று அவர் கேட்டார். (அ)

# உரம் எடுத்து வர படையினர் கெடுபிடி; கிளிநொச்சி விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2
கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்குத் தேவையான அளவு உரத்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் விவசாயிகள் திண்டாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் இரணமடுக்குளம் சுற்றாடலில் 20 ஆயிரம் ஏக்கர்களில் தற்போது சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இச் சிறு போக நெற்செய்கைக்கு 80 ஆயிரம் அந்தர் உரம் தேவைப்படுவதாகவும்—

ஆனால் தாண்டிக்குளம் ஊடாக 15 லொறிகளில் 3 ஆயிரம் அந்தர் உரமே எடுத்து வருவதற்கு படையினர் அனுமதித்துள்ளனர் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கிளிநொச்சிப் பகுதி மக்கள் நெற்செய்கையில் திருப்திகரமான விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலை உருவாகி வருகிறது. (ஒ-4)

## யாழ். மாவட்டத்தில் உரம் கையிருப்பு குறைவு

யாழ். மாவட்டத்தில் தற்போது கையிருப்பில் உள்ள உரம் ஜூலை மாதம் வரைக்குமே போதுமானதாக இருப்பதாக கமநல சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது 600 மெற்றிக் தொன் உரமே யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தில் கையிருப்பிலுள்ளது.

இதேவேளை பெரும் போகச் செய்கையின் போது பாவிப்பதற்கு 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்துக்கு அடிக்கட்டு உரம் எதிர்வரும் செப்ரெம்பரில் தேவைப்படுவதாகவும் அந்த உரத்தை கப்பல் மூலம் தருவிப்பதற்கு கொழும்பில் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவது குறித்து கொழும்பில் நடக்கும் மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 2
யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கு அளிக்கக்கூடிய உதவிகள் குறித்து எதிர்வரும் 5ஆம் திகதி கொழும்பில் மாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது.

ஐ நா. அபிவிருத்தி திட்டத்தின் ஏற்பாட்டில் நடக்கும் இம்மாநாட்டில் உதவி வழங்கும் நாடுகளின் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர்.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் இம்மாநாட்டில் கலந்து கொண்டு தேவைகள் குறித்து விளக்கமளிப்பார் எனத் தெரியவருகிறது.

இடம்பெயர்ந்து மக்கள் புனர்வாழ்வுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த போரூட் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் யுனெஸ்கோ ஆகிய அமைப்புகள் ஏற்கனவே உதவ முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதியும் கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

"உதயன்" கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும்-ஏழுபேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான- உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் பருத்தித்துறை திக்கழனை மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி- கொக்குவில் பொற்பதி 'ஏ' அணி எதிர் புத்தூர் எவரெஸ்ட் அணி.

★ 4.45 மணி - சுழிபுரம் சத்தியா வி. க. அணி எதிர் கொக்குவில் வி. க. 'பி' அணி. (ஒ-3)

★ ★ ★

வண. சகோதரர் ஹில்லறி ஜோசப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் லாசாலா சகோதரர்கள் சபை நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 மணி - அமல மரியதியாகிகள் குருத்துவ பயிற்சி நிலைய அணி எதிர் ஜொனியன்ஸ் 'ஏ' அணி.

★ 4 மணி - ஜொனியன்ஸ் "ரெட்" அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் அணி. (ஒ-3)

★ ★ ★

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் தொடர்பான சிநேகபூர்வமான உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று பி.பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கின்றன.

பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

உதைபந்தாட்டம் - வேலணை கோட்ட ஆசிரியர்கள் எதிர் வேலணை கோட்ட மாணவர்கள்.

வலைப்பந்து :- வேலணைக் கோட்ட ஆசிரியைகள் எதிர் வேலணைக் கோட்ட மாணவிகள். (ஒ-3)

### எல்லைப்புற--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ 60 மி. மி ஸ்ரோப் — 1
★ கிளைமோர் — 4
★ நடுத்தர ரவைகள் — 6, 620
★ கிளைமோர் வெடிக்க வைக்கும் சாதனம் — 1
★ ஆர். பி. ஜி கிளீனிங் றொட் — 1
★ இராணுவ சப்பாத்து — 2 சோடி
★ வயல் றோல் — 3
★ சாதாரண சப்பாத்து — 1 சோடி
★ மழைக்கவசம் — 3

இத்தாக்குதலில் விடுதலைப் புலிப் போராளிகளான விரவேங்கை வன்னியன் (தங்கத்துரை ஜோன்சன் — மூதூர்), வீரவேங்கை வீரையன் (அந்தோனிப் பிள்ளை ஜஸ்டின் அமலதாஸ் — ஏழாலை) ஆகியோர் சாவு அடைந்தனர். (ஒ-3)

### லெப்டினன்ட்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் இந்த வீராவேசத் தாக்குதலில் லெப்டினன்ட் கேணல் காமினி பெர்னாண்டோ மற்றும் ஒரு அதிகாரி உட்பட 11 பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். 35க்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த படையினரின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று செய்திகள் தெரிவித்தன.

மூன்றாம் ஈழப் போரில் முதற் தடவையாக லெப். கேணல் தர இராணுவ அதிகாரி ஒருவர் திருகோணமலையில் கொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை —

திரியாயில் நடந்த இராணுவ நடவடிக்கைக்கு தலைமை வகித்த அதிகாரி மற்றுமொரு அதிகாரி உட்பட ஏழு இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டதாகவும் 85 பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (ஒ-3-6-5)

### யாழ். மாவட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஏனைய பகுதி ஆசிரியர்களுக்கு வழங்க போதிய நிதி இல்லை என்றும் — மாகாண சபையில் இருந்து தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — ராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களுக்கு சம்பளப் பாக்கியை இப்போதைக்கு வழங்குவதில்லை என்று மாகாணசபை உயர் மட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (ஒ-3)


எங்கள் நிலங்களை எதிரிகள்
எரித்துக் கொண்டிருக்கையில்
எங்கோ மூலையில்
உளவாளி சிரித்துக்கொண்டிருப்பான்
அடையாளம் கண்டபின்னும்
அலட்சியம் செய்யாதீர்!
அடுத்த வெடி உங்களின்
தலைமேலே விழக்கூடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் பீரிஸுடன் பேச்சு

கொழும்பு, ஜூன் 2
அரசுக்கும் — புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு உதவுவது குறித்து ஆராய கொழும்பு வந்திருக்கும் கனேடிய வெளியுறவு இணை அமைச்சர் றேமண்ட் சான் நேற்று கொழும்பில் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸுடன் விரிவாகப் பேச்சு நடத்தினார். (உ-6)

### உத்தரப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லது—

கன்ஷிராமை ஆட்சி அமைக்கும்படி அழைத்து பெரும்பான்மையை நிரூபிக்கும்படி கோருவதா அல்லது—

தற்போதைய சட்டசபையைக் கலைத்து பொதுத் தேர்தல்களுக்கு உத்தரவிடுவதா என்பது குறித்து ஆளுநர் இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

### மனித உரிமை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாக விஜயம் செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விசாரணை செய்து உண்மை நிலையைக் கண்டறிய இந்தச் செயலணி பூரண அதிகாரம் கொண்டிருக்கும்.

கைது செய்யப்பட்டவரின் விவரங்களைக் கொண்ட பதிவுப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும்.

அவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தடுத்து வைக்கப்பட்டவரின் நலனைப் பேணவும், அவர்களின் அடையாளம் சம்பந்தமான விசாரணைகளை நடத்தவும் மேற்படி செயலணிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும்.

தடுத்து வைக்கப்பட்ட ஒருவர் விடுதலை செய்யப்பட்டதும், அவரது குடும்ப அங்கத்தவர் ஒருவரிடம் அவர் ஒப்படைக்கப்படுவதையும் செயலணி உறுதி செய்யும்.

எவரும் கைது செய்யப்படும் போது அதுபற்றிய உறுதிச் சீட்டு ஒன்று அவரது உறவினர்களிடம் வழங்கப்படும்.

ஒருவரைக் கைது செய்யும் போது கைது செய்யும் அதிகாரியின் அடையாளம் நிரூபிக்கப்படவேண்டியதும் அவசியமாக இருக்கும்.

எந்த மொழியிலும் வாக்குமூலத்தை அளிக்கும் உரிமை ஒருவருக்கு உண்டு.

— இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

## பொருள்கள் ஏற்ற தயார் நிலையில் குமண

யாழ். மாவட்டத்துக்கான உணவுப் பொருள்களை 'குமண' கப்பலில் ஏற்றும் பணிகள் ஓரிரு தினங்களில் ஆரம்பிக்கும் என்று கொழும்பில் இருந்து செயலகத்துக்கு நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

தனியார் மற்றும் ப. நோ. கூ. சங்கங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் மட்டுமே குமண கப்பலில் ஏற்றப்படவுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப்பொருள்களை "லங்கா முடித" கப்பலில் ஏற்றும் வேலைகள் தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்று வருகின்றன. (ஒ-3)

## 35 சிப்பாய்களை இன்னும் காணவில்லை

கடந்த சனியன்று இடம்பெற்ற தரவைக்குளம் முகாம் தகர்ப்பின் போது காடுகளில் தப்பி ஓடிய 35 ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என செய்திகள் தெரிவித்தன. (உ-3)

## ஆலயங்களில்

அரியாலை, நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு சகஸ்ரநாம ஆயிரத்தெட்டு சங்காபிஷேகமும், விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறும்.

இரவு 7-00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து விநாயகப் பெருமான் வீதிவலம் வந்து அடியார்களுக்கு திருவருள் பாலிக்கவுள்ளார். (ஐ-5-30)

★ ★ ★

அச்சுவேலி உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலய "நாதன பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா" மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ-11)

## இன்று

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை தமிழ்விழா இன்று காலை 9. 30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக வித்துவான் க. சொக்கலிங்கம் கலந்து கொள்வார்.

★ ★ ★

கல்வி சேவைக்கு, ஆசிரியர்களை உள்வாங்குதல் பற்றிய அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, கல்வி வலயம்—1 இன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இரு வலயங்களையும் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், மற்றும் கோட்ட அலுவலக உதவியாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-5)

### படையினருக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புதிய காப்புறுதித் திட்டத்தின் அடிப்படையில் விபத்து இறப்புக்களுக்கு நஷ்ட ஈடாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும்.

நிரந்தரமாகவும், முற்றாகவும் வலது குறைதல், கண்பார்வை இழப்பு, கைகள் இழக்கப்படல், கால் மற்றும் ஏனைய அங்கங்கள் இழப்பு என்பனவும் இந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ் அடங்குகின்றன.

இத்தகைய விபத்துக்களுக்கு 50 ஆயிரம் ரூபாவில் இருந்து ஒரு லட்சம் ரூபா வரை நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது.

தற்சமயம் வழங்கப்பட்டு வரும் நஷ்டஈடுகளுக்கு மேலதிகமாக படையினருக்கு இந்த நன்மை கிடைக்கவிருக்கிறது. (அ-3)

### முழு நேர...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முழுக்கவனம் செலுத்தக் கூடியதாக அவரை முழுநேர யுத்த அமைச்சராக நியமிப்பது அவசியம் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா தேசிய பாதுகாப்பு அமைச்சராக லலித் அத்துலத்முதலியை நியமித்ததையும் "த ஐலண்ட்" சுட்டிக்காட்டி உள்ளது. (அ)